புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மே 05, 2011 | புரட்சி 10 | முழக்கம் 16 | விலை: ரூ.2.50

## இனப்படுகொலை: அய்.நா. தலையிடக் கோரி

# கையெழுத்து இயக்கம் தொடங்கியது





*ஈழத் தமிழர் இனப் படுகொலையில் அய்.நா. தலையீட்டைக் கோரி – உலகம் முழுதும் தமிழர்கள் நாடு கடந்த தமிழீழ அரசின் வேண்டுகோளை ஏற்று கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளனர்.*

அய்.நா. பொதுச் செயலாளர் பான்கி மூன் நியமித்த மூவர் குழு அறிக்கை ஈழத்தில் இறுதி கட்டப் போரில் நடந்த தாக்குதல் இனப் படுகொலையே என்பதை உறுதி செய்துள்ளதால் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இந்தக் குற்றச்சாட்டுகளை புலனாய்வு செய்ய வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் முதன்மை அமைச்சர் ருத்திரகுமார் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை மீது வழக்கு தொடருவதற்குததான். அய்.நா. பாதுகாப்புக் குழுவின் ஒப்புதல் தேவை. ஆனால், அது குறித்து புலனாய்வு செய்வதற்கு சடட நிபுணர்களுக்கு பரிந்துரைக்க அய்.நா. பொதுச் செயலாளருக்கே உரிமை இருக்கிறது என்று ருத்திரகுமார் - அய்.நா.வின் சட்டப் பிரிவுகளைக் காட்டி விளக்கியுள்ளார்.

இப்போது நியமிக்கப்பட்ட மூவர் குழு அய்.நா. செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக அய்.நா. செயலாளரே அமைத்ததாகும். இது ஆலோசனைக் குழுதான். இதற்கு அடுத்த கட்டமாக இந்த ஆலோசனைக் குழு அறிக்கையின் அடிப்படையில் அதிகாரம் கொண்ட ஆணைக் குழு ஒன்றையே அமைக்க அய்.நா. செயலாளருக்கு உரிமை இருக்கிறது என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். எனவே, அய்.நா. செயலாளரே தனது உரிமையைப் பயன்படுத்தி இலங்கையின் போாக் குற்றங்களை விசாரிக்க அதிகாரம் கொண்ட ஆணையம் ஒன்றை அமைக்கவும், சாவதேச குற்றவியல் மன்றம் - சட்ட நிபுணர்களைக் கொண்டு, வழக்கு தொடருவதற்கான முன்னேற்பாடு நடவடிக்கையாக நடந்த சம்பவங்கள் பற்றி புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி, பல லட்சம் தமிழர்களின் கையொப்பங்களைப் பெற்று அய்.நா. செயலாளருக்கு அனுப்பி வைக்கும் இயக்கத்தையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தொடங்கியுள்ளது. அதற்கான படிவங்களையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் இணையதளம் வெளியிட்டுள்ளது.

கையெழுத்து இயக்கம் நடத்த விரும்புவோர், அந்த படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். சென்னையில் கடந்த 30 ஆம் தேதி மாலை 2000 பேர் திரண்ட பேரணியை நாடு கடந்த தமிழீழ அரசாங்க தோழமை மய்யம் அதன் அமைப்பாளர் பேராசிரியர் சரசுவதி தலைமையில் நடத்தியது. பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி, புதிய தமிழகம், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், கிராமப் பெண்கள் விடுதலை இயக்கம், சேவ்தமிழ்' அமைப்பு, 'மே 17' இயக்கம், பல்வேறு மீனவர்கள் அமைப்புகள், பெண்கள் அமைப்புகள் உள்ளிட்ட 2000-த்துக்கும் அதிகமானோர் கண்ணகி சிலையிலிருந்து உழைப்பாளர் சிலை நோக்கிப் பேரணியாக புறப்பட்டு, இலங்கை அரசு மீது பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தி முழக்கமிட்டு வந்தனர். மறைந்த மீனவர் தலைவர் ஜீவரத்தினம் மகள் டாக்டர் பானுமதி பாஸ்கர் தொடங்கி வைத்தார். பேரணி தொடக்கத்திலும், இறுதியிலும் பல்வேறு அமைப்பின் பிரதிநிதிகளும் உரையாற்றினர். பேரணியின் இறுதியில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் வேண்டுகோளையேற்று கையெழுத்து இயக்கத்தையும் பேராசிரியர் சரசுவதி தொடங்கி வைத்தார்.

அய்.நா. குழுவின் அறிக்கை - இனப் படுகொலை என்ற சொற்றொடரை பயன்படுத்தவில்லை என்றாலும், 1948 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'இனப் படுகொலைக்கு எதிரான சர்வதேச உடன்பாடு' மற்றும் 1949 ஆம் ஆண்டின் ஜெனிவா சர்வதேச உடன்படிக்கையின் கீழ் இப்போது நடந்துள்ள போர்க் குற்றங்களை இனப் படுகொலையாகவே கருதி, அய்.நா. நேரடியாக தலையிட முடியும் என்று சர்வதேச சட்டவியல் அறிஞர் பிரான்சிஸ் ஏ. பாய்ல் உறுதியாகக் கூறி வருகிறார்.

அப்பாவி பொது மக்கள் பரவலாக ஷெல் வீசி கொல்லப்பட்டுள்ளனர். மருத்துவமனை மற்றும் மனித உதவி அமைப்புகள் மீது தாக்குதல்கள் நடந்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக வழங்க வேண்டிய மனிதாபிமான உதவிகள் மறுக்கப்பட்டுள்ளன. சண்டையின்போது முகாமில் இருந்தவர்களும், போராளிகளும் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். ஊடகங்கள் மற்றும் அரசை விமர்சித்தவர்களும், மனித உரிமை மீறல்களால் பாதிப்புக்குள்ளாக்கப் பட்டனர் என்று - அய்.நா. குழு கூறியிருப்பதை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. தாக்குதலை நடத்தியது சிங்களர்களை மட்டுமே கொண்ட இராணுவம்; தாக்குதலுக்கு உள்ளானது, தமிழர்கள் மட்டுமே என்பதால், இது இனப் படுகொலை என்ற உறுதியான முடிவுக்கு வரவேண்டும் என்றும், நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முதன்மை அமைச்சர் ருத்திரகுமார் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டுகிறார்.

போர் முடிவுக்கு வந்த பிறகு, தமிழ் மக்களை மட்டும் சிறீலங்கா சித்திரவதைக்கும், கட்டாய சிறைக்கும் உள்ளாக்கி, மனித உரிமைகளை மீறி செயல்பட்டுள்ளது. இது இனத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட பாகுபாடுகள் ஆகும். போரின் போது நடந்ததாக அய்.நா. அறிக்கை உறுதி செய்துள்ள பல்லாயிரக்கணக்கான தமிழர் படு கொலை, பாலியல் வன்முறை, ஒட்டு மொத்தமாக சுட்டுக் கொன்றது, உணவு மற்றும் மருந்துகளை வழங்க மறுத்தது ஆகிய நடவடிக்கைகள், இனப் படுகொலைக்கு உட்பட்டதே ஆகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப் பரப்பில் மக்கள், இன ரீதியாக கொல்லப்பட்டுள்ளனர்.

சர்வதேச சட்டப்படியும், உள் நாட்டு சட்டப் படியும், இவை இனப்படுகொலைகளேயாகும். இந்தக் கொலைகளின் உள்நோக்கமே, முக்கியமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த உள்நோக்கத்தை, நடவடிக்கையின் அளவு மற்றும் தன்மைகளின் அடிப்படையில் உய்த்து உணரலாம். அய்.நா.வின் விசாரணை அறிக்கை - இனப் படுகொலைக்கான சர்வதேச சட்ட விளக்கங் களுடன் மிகச் சரியாக பொருந்தி வருகிறது. எனவே இவையாவும் சர்வதேச குற்றங்களாகிவிடுகின்றன. இந்த நிலையில் இந்தக் குற்றங்களுக்கு பொறுப்பான அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து விசாரிக்க உரிமை இருப்பதால், அந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு கையெழுத்து இயக்க வழியாக வலியுறுத்தும்.

## பிரிட்டன் வரவேற்பு

*ராஜபக்சே போர்க்குற்றம் செய்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ள அய்.நா. குழுவின் அறிக்கையை பிரிட்டன் வரவேற்றுள்ளது. இலங்கை இதற்கு பொறுப்புடன் பதில் அளிக்க வேண்டும் என்றும், இலங்கையில் நடந்த தாக்குதல் பற்றி நம்பகத் தன்மையுள்ள விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று, பிரிட்டன் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததாலேயே அய்.நா.வின் இந்தக் குழுகூட அமைக்கப்பட்டது என்றும் பிரிட்டன் கூறியுள்ளது.*

தலையங்கம்

## எது, தேச துரோகம்?

மனித உரிமைப் போராளி டாக்டர் பினாயக் சென் மீது அவர் 'மாவோயிச' நூல்களை வைத்திருந்ததால் 'தேசத் துரோகம்' இழைத்துவிட்டார் என்று சத்தீஸ்கர் மாநில நீதிமன்றம் விதித்த ஆயுள் தண்டனையிலிருந்து உச்சநீதிமன்றம் அவரை பிணையில் விடுதலை செய்துள்ளது. 1860 ஆம் ஆண்டு, இந்திய குற்றவியல் சட்டம் உருவாக்கப்பட்டபோது இடம் பெறாத தேசத் துரோகக் குற்றப் பிரிவு, அதற்கு 10 ஆண்டுகள் கழித்து 1870 ஆம் ஆண்டில் தான் சேர்க்கப்பட்டது. அதுதான் பிரிவு '124ஏ'. மருத்துவர் பினாயக் சென் இந்தப் பிரிவில் குற்றம் சாட்டப்பட்டதை மட்டு மல்ல, இப்படி ஒரு சட்டம் ஒரு ஜனநாயக அமைப்பில் தேவை தானா என்ற கேள்வியையும் உச்சநீதிமன்றம் எழுப்பியிருக்கிறது.

'தேசத் துரோகம்' என்பதற்கான விளக்கம் தெளிவாக இல்லாத நிலையில் ஆட்சியாளர்கள் தங்களுக்கு எதிரான கருத்துகளை முடக்குவதற்கு முறைகேடாகப் பயன்படுத்தும் சட்டமாகவே இது பயன்படுத்தப்பட்டு வருகிறது.

1933 ஆம் ஆண்டில் பெரியார் "இந்த ஆட்சி முறை ஏன் ஒழிய வேண்டும்?" என்று அவர் நடத்திய 'குடிஅரசு' ஏட்டில் எழுதிய தலையங்கத்துக்காக அன்றைய பிரிட்டிஷ் ஆட்சி, தேசத் துரோக குற்றச்சாட்டின் கீழ் வழக்கு தொடர்ந்து பெரியாருக்கு 9 மாத சிறைத் தண்டனையையும், பதிப்பாளரான அவரது தங்கை கண்ணம்மாளுக்கு 6 மாத சிறைத் தண்டனையையும் விதித்தது. அதன் காரணமாக, அப்போது 'குடிஅரசு' பத்திரிகையை நிறுத்திய பெரியார், அதற்கு மாற்றாக 'புரட்சி' என்ற ஏட்டைத் தொடங்கினார். அப்போது பெரியார், "இப்படிப்பட்ட அடக்குமுறையை வரவேற்குமாறு எனது தோழர்களுக்கு வழிகாட்ட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்" என்று எழுதினார்.

1922 இல் காந்தியார்கூட இதே சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, தேசப் பற்று என்பதை சட்டத்தின் மூலமாக உருவாக்கி விட முடியாது என்றே நீதிமன்றத்தில் கூறினார். 64 ஆண்டு "சுதந்திர" இந்தியா, "தேசப் பற்றை" சட்டத்தின் மூலம் தான் நிலை நிறுத்த வேண்டியிருக்கிறது என்பது தேசத்துக்கே அவமானம்.

இந்தியாவின் அரசியலையும், பொருளாதார அதிகாரத்தையும் சர்வதேச வர்த்தக நிறுவனங்களின் காலடியில் சமர்ப்பித்து விட்டு, அதற்கு பார்ப்பனர்களையும், பனியாக்களையும் பாதுகாவலர்களாக்கியிருப்பவர்கள் 'தேசபக்தி' பற்றிப் பேசுவதும், 'தேசத் துரோகம்' தடுப்புச் சட்டங்களை சட்டப் புத்தகத்தில் வைத்திருப்பதும் கேலிக் கூத்துதான்.

தேசத் துரோக சட்டத்தை அகற்றிவிட வேண்டும் என்று இப்போது பார்ப்பன ஏடுகளேகூட எழுதுகின்றன. இந்த சட்டப் பிரிவை மட்டுமல்ல, தேசியப் பாதுகாப்பு போன்ற கருத்துரிமையைப் பறிக்கும் எந்த சட்டமும், சட்டப் புத்தகத்தில் இடம் பெறக் கூடாது என்பதே நமது உறுதியான கருத்து. தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் அ.இ.அ.தி.மு.க. 'பொடா'வை ஏவியது என்றால், தி.மு.க. ஆட்சி தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ('பொடா' காலாவதியாகி விட்டதால்) ஏவியது. கருத்துகளை வெளியிட்டதற்காகவே இந்த அடக்குமுறை சட்டங்கள் பயன்படுத்தப்பட்டன என்பதுதான், இதில் வெட்கக்கேடான அம்சம்.

'இந்தியா' என்ற நாடு இங்கே வாழும் தமிழர்களின் உரிமைக்களையும் சுயமரியாதையையும் புறக்கணிக்கும்போது, இந்த நாட்டின் குடி மக்களாக நாங்கள் இருக்க வேண்டும் என்று ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்? எங்களுக்கான தாயகம் – தமிழ்நாடு விடுதலை பெற வேண்டும் என்று பேசுவதும் – எழுதுவதும் – பரப்புவதும் – அடிப்படை கருத்துரிமை. அதைப் பறிப்பதும் – பேசுவதை 'தேச துரோகம்' என்பதும், 'பார்ப்பன நாயகமே' தவிர 'ஜனநாயகம்' அல்ல.

இத்தகைய தேச விரோத சட்டங்களை பல நாடுகள் தங்கள் சட்டத்திலிருந்து நீக்கிவிட்டன. 2001 ஆம் ஆண்டு கானாவும், 2007 இல் நியூசிலாந்துவும், 2009 இல் பிரிட்டனும், தேச விரோத சட்டப் பிரிவுகளை நீக்கிவிட்டன. ஆஸ்திரேலியா, கனடா மற்றும் அயர்லாந்து நாட்டின் சட்ட ஆலோசனை அமைப்புகள், இத்தகைய தேச விரோத சட்டப் பிரிவுகளை நீக்கி விடுமாறு, அந்த நாடுகளுக்கு பரிந்துரை வழங்கியுள்ளன. தேச விரோத சட்டம் சட்ட விரோதமானது என்று 2010 இல் உகாண்டா நாட்டின் உச்சநீதிமன்றமும், அதேபோல் நைஜீரியா நாட்டின் நீதிமன்றமும் அறிவித்து விட்டன.

மாவோயிச நூல்களை வைத்திருப்போர் எல்லாம் மாவோயிஸ்டுகள் என்றால் காந்தியார் நூல்களை வைத்திருப்போர் எல்லாம் காந்தியவாதிகளா என்று உச்சநீதிமன்றம் சரியாகவே கேட்டிருக்கிறது. மாவோயிசமானாலும் மார்க்சியம் என்றாலும், பெரியாரியம் என்றாலும் எந்த சிந்தனையையும் ஏற்றுக் கொள்வதற்கும் அதைப் பின்பற்றுவதற்கும் முழு உரிமை உண்டு. பார்ப்பனியம், இந்துத்துவம், முதலாளித்துவம் இருக்கும் வரை பெரியாரியம், அம்பேத்கரியம், மாவோயிசம், மார்க்சியம் எல்லாம் இருந்து தானே தீரும்?

# அய்.நா. அறிக்கை: உலகம் முழுதும் எதிரொலி

### ராஜபக்சே பெயர் நீக்கம்

உலகின் சக்தி வாய்ந்த 100 தலைவர்களில் ஒருவராக அமெரிக்காவின் 'டைம்' பத்திரிகை ராஜபக்சேயை ஏற்று, அவருக்கு நான்காவது இடத்தைத் தந்திருந்தது. அய்.நா. அறிக்கையில் ராஜபக்சே போர்க் குற்றவாளி என்பது உறுதி யானதைத் தொடர்ந்து 'டைம்' பத்திரிகை ராஜ பக்சேயின் பெயரை பட்டியலிலிருந்து நீக்கி விட்டது. உலகம் முழுதும் வாக்கெடுப்பு நடத்தி, இதைத் தீர்மானிக்கிறது 'டைம்'. ராஜபக்சே தனது தூதரகங்கள் வழியாக ஏராளமான கள்ள ஓட்டுகளை தனக்கு ஆதரவாக போட வைத்ததும் அம்பலமானது. உலகின் வலிமையான இணைய தளங்களான 'சேனல் 4' மற்றும் அல்ஜசீரா இணையதளங்கள் தொடர்ந்து ராஜ பக்சேயின் போர்க் குற்றங்களை அம்பலமாக்கி, 'டைம்' ஏட்டுக்கு கண்டனமும் தெரிவித்து வந்தன. கடைசியாக ராஜபக்சே பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

### பான் கி மூனுக்கு கிடுக்கிப் பிடி

ஈழத்தில் இறுதி கட்டப் போரில் தமிழ் மக்களைக் காப்பாற்றும் நோக்கத்தோடு விடுதலைப் புலிகள் தலைவர்கள் நடேசன், புலித்தேவன், ரமேஷ் போன்றோர் தலைமையில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்தவர்களை ராணுவம் சுட்டுப் பிணமாக்கியது. இது குறித்து ஏற்கனவே முதன்மை செயலாளர் விஜய் நம்பியார் வழியாக அய்.நா.வுக்கும், ராஜபக்சேயின் சகோதரரான கோத்த பய ராஜபக்சேவுக்கும் முன் கூட்டியே தகவல் தெரிவிக்கப்பட்டது. விஜய் நம்பியார், சர்வதேச நெறிமுறைகளின்படி வெள்ளைக் கொடியுடன் வருவோருக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்று உறுதி கூறியிருந்தார். ஆனால், வஞ்சகமாக, உறுதிக்கு மாறாக புலிகளின் தளபதிகளையும் சரணடைய வந்த தமிழ் மக்களையும் ராணுவம் சுட்டுப் பிணமாக்க சதி செய்தார். இது பற்றி கடந்த வாரம் அய்.நா.வின் அறிக்கை வெளிவந்த பிறகு அய்.நா. பொதுச் செயலாளர் பான்–கீ–மூனிடம் நியூயார்க்கில் நேரடியாகவே 'இன்னர் சிட்டி பிரஸ்' பத்திரிகையாளர் கேள்வி கேட்டார். தமிழர்கள் வெள்ளைக் கொடியுடன் வந்தபோது, விஜய் நம்பியாரின் பங்கு என்ன? அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்று கேட்டதற்கு இது பற்றி தன்னுடைய மூத்த ஆலோசகர்களுடன் விவாதிக்க இருப்பதாகக் கூறி, பான்–கீ–மூன் நழுவி விட்டார்.

### அய்.நா. அதிகாரி குட்டை உடைக்கிறார்

ஈழத்தில் போர் உச்சகட்டத்தில் இருந்தபோது, அய்.நா.வின் அதிகாரபூர்வ செய்தி தொடர்பாளர் என்ற பதவியில் இருந்தவர் கோர்டன் வைஸ். இப்போது பதவி ஓய்வு பெற்று ஆஸ்திரேலியாவில் உள்ளார். அய்.நா. அறிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள அவர் இறுதி கட்டப் போரில் பெரும் எண்ணிக்கையில் நடந்த உயிரிழப்பை தடுக்க, அய்.நா. தவறிவிட்டது என்று கூறியுள்ளார். விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் இந்தியா செயல்பட்டதால், பொது மக்கள் உயிரிழப்புகள் பற்றி, கண்டு கொள்ளவே இல்லை என்று இந்தியா மீதும் குற்றம் சாட்டியுள்ளார். இந்தியாவுக்கு போர் நடந்த பகுதியில் வலிமையான புலனாய்வு வசதிகள் இருந்தன. நடந்தவையெல்லாம் இந்தியாவுக்கு தெரியும் என்று கூறியுள்ள அவர், விடுதலைப் புலிகள் தலைவர்களை வெள்ளைக் கொடியுடன் சரணடைய தொடர்ந்து வலியுறுத்தியதே இலங்கை அரசுதான். அதற்குப் பிறகு சரணடைய வந்தவர்களை சுட்டுக் கொன்றார்கள் என்றும் வைஸ் கூறியுள்ளார்.

### 'ஆம்னஸ்டி' கண்டிக்கிறது

அய்.நா. அறிக்கை பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இறுதி கட்டப் போரில் கொல்லப்பட்டது உண்மை என்பதை உறுதிப்படுத்தியுள்ளதால், அய்.நா.வே இலங்கை மீது பன்னாட்டு விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைக் கழகம் (ஆம்னஸ்டி இன்டர் நேஷனல்) அய்.நா.வுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. அக்கழகத்தின் 'ஆசியா – பசிபிக்' இயக்குனர் சாம் ஜாரிஃபி விடுத்துள்ள அறிக்கையில் –

"போரின் இறுதிகட்டத்தில் சிக்கிய மக்களின் நிலையை அய்.நா. குழுவின் முன் நேரில் பார்த்த சாட்சிகள் கூறியிருக்கும் தகவல்கள் அதிர வைக்கின்றன. மரண ஓலம் கேட்டிருக்கிறது. கடும் காயங்களுடன், மரண பயத்தில், மருத்துவ வசதியின்றி, உணவு இன்றி, குடிநீர் இன்றி தவியாய் தவித்துள்ளனர். போர்ப் பகுதியிலிருந்து தப்பி வந்தவர்களையும் ராணுவம் சிறை பிடித்து கொடுமைப்படுத்தியுள்ளது" என்று சர்வதேச மனித உரிமைக் கழகம் குற்றம் சாட்டியுள்ளது.

### கோத்த பய சிக்குகிறார்

அய்.நா. அறிக்கை வெளி வந்ததைத் தொடர்ந்து இலங்கை பாதுகாப்பு செயலாளரான கோத்தா பய ராஜபக்சேயை அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புத் துறை கைது செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று அமெரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ள கோத்தபய ராஜபக்சே – இப்போது அமெரிக்காவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார்.

## ராஜீவ் கொலை பற்றி வழக்கறிஞர் துரைசாமி எழுதும் நூல்: உளவுத் துறை அதிர்ச்சி

கழக மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, ராஜீவ் கொலை வழக்குப் பற்றி நூல் ஒன்றை எழுதிக் கொண்டிருக்கிறார். கொலை வழக்கில் மறைக்கப்பட்ட பல உண்மைகளை இந்த நூல் வெளிக் கொண்டு வரும் என்று கருதப்படுகிறது. உளவுத் துறை வட்டாரங்கள் இந்த நூல் வெளி வருவதை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளன. எனவே நூல் வெளி வருவதற்கு முன்பே நூலுக்கு தடை கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்ட தம்பா என்கிற பரணீதரன், உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

"ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் நான் சாட்சிப் பட்டியலில் இடம் பெற்றிருந்தேன். எனக்கு அந்த வழக்கு விவரங்கள் அனைத்தும் தெரியும். இந்த சம்பவம் பற்றி வழக்கறிஞர் எஸ். துரைசாமி, "ராஜீவ்காந்தி மரணத்தின் பின்னணியில் மறைக்கப்பட்ட உண்மைகளும், மர்மங்களும்" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். விரைவில் அது வெளியிடப்பட உள்ளது. ராஜீவ் கொலையாளிகள் தரப்பில் ஆஜரானதால் அவருக்கு பல உள் விவரங்கள் தெரிந்து இருக்கும். தடா வழக்கு விசாரணை விவரங்களை வெளியிடக் கூடாது என்று தடா சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் வெளியிடப்படும் தகவல்களால், படுகொலை சம்பவத்தில் விசாரணை மேற்கொண்ட நீதிபதி மற்றும் சி.பி.ஐ. மீது வைத்துள்ள நம்பிக்கை மக்களிடையே குறையும். எஸ்.துரைசாமி காங்கிரஸ் எதிர்ப்பாளர். எனவே அவர் அந்த புத்தகத்தை வெளியிட தடைவிதிக்க வேண்டும்." - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.ஜோதி மணி, இன்னும் 4 வாரங்களுக்குள் இதற்கு பதில் மனு தாக்கல் செய்யும்படி சி.பி.ஐ. மற்றும் வழக்கறிஞர் துரைசாமி ஆகியோருக்கு நோட்டீசு அனுப்பி உத்தரவிட்டார்.

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி வரலாறுகளை சுட்டிக்காட்டி உரை:

# அம்பேத்கர் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர்

*அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவர் என்று கூறுவது தவறு. அவர் அனைத்து ஒடுக்கப்பட்ட மக்களின் தலைவர் என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூறினார்.*

14.4.2011 வியாழக்கிழமை அம்பேத்கர் பிறந்த நாள் அன்று காலை 10 மணிக்கு சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகம் அருகில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு, சேலம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பாக, மாவட்ட செயலாளர் சக்திவேல் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது.

அன்று மாலை 7 மணிக்கு, சேலம் போஸ் மைதானத்தில், அம்பேத்கர் பிறந்த நாள் பொதுக் கூட்டம் நடை பெற்றது. சமர்பா குமரன் யோகராணி கலைக் குழுவினரின் எழுச்சிப் பாடல்களோடு துவங்கிய இப்பொதுக் கூட்டத்திற்கு, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் இளமாறன் தலைமை ஏற்றார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் நிலவன், தமிழக மக்கள் உரிமை கழக ஒருங் கிணைப்புச் செயலர் வழக்கறிஞர் புகழேந்தி, த.ஒ.வி.இ. துணைப் பொதுச் செயலாளர் தமிழ் நேயன், அறிஞர் அம்பேத்கர் அமைப்புச் சாரா தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் அரங்க.செல்லத் துரை, தாய்மண் கல்வி பண்பாட்டு இயக்கம் வழக்கறிஞர் நெப்போலியன் ஆகியோர் உரை யாற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரையின் சுருக்கம்:

தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று அரசே அறிவித்தப் பின்னாலும், இன்று தமிழ்ப் புத்தாண்டு என்று அனைத்து தொலைக் காட்சிகளிலும் அறிமுகப்படுத்திக் கொண்டிருக்கிற இந்த ஏப்ரல் 14 இல், அம்பேத்கரை நினைவுபடுத்தி பேசுவதற்காக அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் கூடியிருக்கிறோம். புரட்சியாளர் அம்பேத்கரை நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டும்? நாம் ஏன் அவரை மற்றவர்களிடம் இருந்து பிரித்து வேறுபடுத்தி தனித்துவமாக பார்க்கிறோம் என்பதில்தான் அம்பேத்கருக்கு பிறந்த நாள் எடுப்பதன் பலனாக இருக்கும். புரட்சியாளர் அம்பேத்கர் பல சிறப்புகளை கொண்டவர். அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பில் பிறந்திருந்தாலும், வெளிநாடுகளுக்கு சென்று படிக்கிற வாய்ப்பினைப் பெற்றார். அங்கு போய் ஆய்வு பட்டங்களையும், பல உயர் பட்டங்களையும் பெற்றார். தத்துவ துறையில், பொருளியல் துறையில், சட்டத் துறையில் பட்டங்களைப் பெற்று திரும்பி வந்தார் என்றால் பெயருக்கு பின்னால் போட்டுக் கொள்வதற்காக அல்ல.

இந்த இந்திய சமுதாயத்தை திருத்த பலர் வந்தார்கள். இந்த சமுதாயத்தில் இருக்கிற கேடுகளை நீக்க வேண்டும் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால், இந்த சமுதாயத்தை மிகச் சரியாக புரிந்து கொண்டவர்கள் சிலர் மட்டுமே. ஜோதிபா புலே தொடங்கி வைத்த புரட்சியை, சரியான பார்வையை பெரியார், புரட்சியாளர் அம்பேத்கர் போன்றவர்கள்தான் எடுத்துச் சென்றார்கள். மற்றவர்கள் எல்லாம் இருந்ததை மெல்ல சீர்திருத்தி, கொஞ்சம் மாற்றி, அதற்கு புதிய வண்ணத்தைப் பூசிவிட்டு செல்வதாக இருந்த காலத்தில், அடிப்படையையே மாற்றியாக வேண்டும் என்று எண்ணிய தலைவர், அதற்காக தனது முழு அறிவை, உழைப்பை, எல்லாவற்றையும் பயன்படுத்திய தலைவர், தத்துவத் துறையில் ஆய்வு செய்யப் போனவர், ஆய்வு மாணவராக இருந்த காலத்தில் ஒரு ஆய்வு கட்டுரை எழுதுகிறார். இந்திய சாதியினுடைய தோற்றம், அதன் செயல்பாடு ஆகியவற்றை ஆய்வு செய்து மாந்தவியல் துறையில் அந்த அறிக்கையை தருகிறார். அவருடைய இருபத்தி ஐந்தாம் வயதில், அவர் ஆற்றிய ஆய்வுரை இன்றைக்கு வரைக்கும் எல்லா விதத்திலும் அதை நாம் புரட்டிப் பார்க்கிற பொழுது, இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் ஆற்றப்பட்ட உரை. இந்த சமுதாயத்தின் கேடுகளாக, இந்த சமுதாயத்தின் நோயை தீர்ப்பதற்கான வழியாக அவர் சொன்னதைத் தான் நாம் மீள் ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

அவர் மகத் மாநாட்டில் பேசினார். பல இடங்களில் பல செய்திகளை பதிவு செய்தார் என்றாலும், லாகூர் மாநாட்டில் அவர் ஆற்ற இருந்த உரை (ஆற்றிய உரை அல்ல) சாதி ஒழிப்பு சங்கத்தார் என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் இவரை தலைமை தாங்கி, தலைமை உரையாற்ற அழைக்கிறார்கள். இவர் உரையை எழுதி அனுப்புகிறார். அதை படித்து பார்த்தவுடன் அதிர்ச்சி அடைந்துவிடுகிறார்கள். இந்த சாதி ஒழிப்புக்காக அவர் சொல்லுகிற வழிமுறைகளைப் பார்த்து அதிர்ச்சி அடைய காரணம்... “இந்து சாஸ்திரங்களின் அதிகாரங்கள் தகர்க்கப்பட வேண்டும். அக மண முறை ஒழிக்கப்பட வேண்டும். இந்து மதம் தகர்ந்தாக வேண்டும். அர்ச்சகர் ஆகும் உரிமையை, உரிய பட்டயம் பெற்றால் அனைத்து சாதியினருக்கும் அளிக்க வேண்டும் என்பதையெல்லாம் வழிமுறையாக சொல்கிறார். இதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தவர்கள் கொஞ்சம் மாற்றிக் கொள்ள சொல்லி கேட்கிறார்கள். அதில் ஒரு கால் புள்ளியை மாற்றவும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். வேண்டாம் என்றால் திருப்பி அனுப்பி விடுங்கள்” என்று அம்பேத்கர் கேட்கிறார். மாநாட்டையே ஒத்தி வைத்து விடுகிறார்கள்.

நாம் புரட்சியாளர் அம்பேத்கரை, அவரின் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமானால், ஒவ்வொருவரும் படிக்க வேண்டியது அந்த நூல். அவர் ஆற்ற இருந்த உரையை நூலாக வெளியிட்டார். நூல் வெளி வந்த இரண்டாம் மாதத்தில், அம்பேத்கரின் அனுமதியோடு தமிழில் பெரியார் வெளியிட்டார். அந்த நூல் தாங்கியிருந்த சிந்தனையைதான் பெரியாரும் கொண்டிருந்தார். அரசியல் நிலைபாடுகளில் இருவருக்கும் சிறு சிறு மாற்றங்கள் இருந்திருக்கலாம். அம்பேத்கர் ஒன்றுபட்ட இந்தியாவை விரும்பினார். பெரியார் தனித் தமிழ்நாடு பேசினார். இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். பெரியார் இந்தி கூடாது என்று சொன்னார். அரசியல் நிலைகளில் அவரவர்களுக்கு இருந்த கருத்தின் அடிப்படையில் சொன்னார்கள். தாழ்த்தப்பட்டோரின் குடியிருப்பை பிற சாதியினர் வாழும் பகுதிகளில் நிறுவ வேண்டும் என்பது பெரியாரின் கருத்தாக இருந்தது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு தனிக் கிணறு வெட்ட காங்கிரஸ் நிதி அனுப்பியது. காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெரியார் வந்த நாற்பத்தி எட்டாயிரம் ரூபாயை திருப்பி அனுப்பினார். பொதுக் கிணற்றில் நீர் எடுக்க போராட வேண்டுமே தவிர தனிக் கிணறு கூடாது என்பது பெரியார் கருத்து. இன்னொரு பக்கம் அம்பேத்கர் தனிக் குடியிருப்பு வேண்டும் என போராட்டம் நடத்தினார். இப்படி பார்த்தால் அவர்களின் கோரிக்கைகளில் வேறுபாடுகள் போல தெரியும். ஆனால் அடி நீரோட்டமாய் இருவர் கருத்தும் சாதி ஒழிப்பே சமூக விடுதலை என்பதாகத் தான் இருந்தது.

பல பேர் படிக்கிறார்கள், பட்டம் பெறுகிறார்கள், தனி மனித வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆனால் புரட்சியாளர் அம்பேத்கர் தான் பெற்ற அறிவை, கல்வியை, பதவியை அனைத்தையும் சமூக மேம்பாட்டிற்காக, சமூக மாற்றத்திற்காக பயன்படுத்திய தலைவர். 1935 இல் மராட்டியத்தில், பம்பாய் மாகாணத்தில் சட்டமன்றத்திற்கு உறுப்பினராக நியமிக்கிறார்கள். நியமனம் பெற்று அவர் ஆற்றிய முதல் உரையிலேயே அங்கிருந்த நில உடைமையாளர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து பேசுகிறார். ஆங்கில அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு செய்த துரோகங்கள் பற்றி பேசுகிறார். அவர் ஒரு நியமன உறுப்பினராக இருந்தும், நியமித்தவர்களையே விமர்சித்து பேசுகிறார். அவர் பதவி முக்கியம் எனக் கருதவில்லை. அவர் சமஸ்கிருதம் படித்தார், வேதங்களை படித்தார், புராணங்களை படித்தார், சாஸ்திரங்களை படித்தார். எதற்கு பயன்படுத்தினார்? இந்திய சமுதாயத்தில் சாதிய பிடியில் இருந்து மக்களை எப்படி காப்பாற்றுவது என்று அறிவதற்குப் படித்தார். மனுதர்மத்தைப் பற்றி அவர் செய்த ஆய்வு, யாருடனும் ஒப்பிட முடியாத அளவிற்குரிய ஆய்வாகும். மனுதர்ம சாஸ்திரத்திற்கு முன்னால் இருந்த காலத்தில் அனைவருக்கும் இருந்த உரிமைகளை எடுத்துக் காட்டினார். அவர் ஒவ்வொரு நாட்டின் சரித்திரங்களை படித்து, அடிமைத் தனத்தைவிட கொடுமையானது தீண்டாமைதான் என்பதை பல அடிமைத்தனத்தோடு ஒப்பிட்டு எழுதினார்.

அம்பேத்கர், வைஸ்ராய் கவுன்சில் உறுப்பினராக (இன்றைய மத்திய அமைச்சருக்கு இணையான பதவி) தேர்ந்தெடுக்கப்பட்டார். பதவி ஏற்பதற்கு முன்னால் நாக்பூரில் ஒரு மாநாட்டைக் கூட்டினார். கற்பி போராடு ஒன்று சேர் என்ற வாசகங்களை பேசியது அந்த மாநாட்டில்தான். பெண்கள் உரிமைக்காக தனியாக ஒரு மாநாடு, சமத்துவ தொண்டர் படை என்ற ஒரு மாநாடு, காந்தியோடு முரண்பட்டிருந்த அம்பேத்கர், இம்சைக்கு எதிரான சொல்தான் அகிம்சை. சாதியவாதிகளால் தாக்கப்பட்டால் திருப்பி தாக்கலாம் என்பதை தனது தொண்டர்களுக்கு சொன்னார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என விளம்பரம் செய்து, அம்பேத்கரை தாழ்த்தப்பட்டவர்களின் தலைவராக சுருக்கிவிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்களின் விடிவெள்ளி என்றோ அரசியல் சட்டத்தை எழுதியவர் என்றோ சொல்வது அவருக்கு பெருமை அல்ல. அவர் சொன்னார்... இந்து சமுதாயத்திற்கு வேதங்கள் தேவைபட்டது தாழ்த்தப்பட்ட வியாசனை வைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு இதிகாசம் தேவைபட்டது. தாழ்த்தப்பட்ட வால்மீகியை வைத்து எழுதிக் கொண்டார்கள். இவர்களுக்கு அரசியல் சட்டம் தேவைப்பட்டது. என்னைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அப்படித்தான் சொன்னார். இவர்கள் எங்கு போனாலும் தாழ்த்தப்பட்ட மக்களை பயன்படுத்தித்தான் தங்கள் உயர்வை நிறுவிக் கொண்டார்கள் என்று சொன்னார். நான் இந்த சட்டத்திற்கு கட்டுப்பட்டவன். ஆனால் மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னவர் அவர்தான். அவர் எழுதிய சட்டத்தைப் பற்றி. நான் வாடகை குதிரையாக பயன்படுத்தப்பட்டேன், என்னுடைய விருப்பத்திற்கு எதிராக பலவற்றை எழுதினேன் என்று சொன்னார். பேனாவை பிடித்தது மட்டும்தான் என் கை, அதை ஆட்டுவித்தவர்கள் பார்ப்பனர்கள் என்றும் சொன்னார். ஆந்திர பிரிவினை விவாதத்தின்போது பேசியவர்கள், ‘நீங்கள் தானே சட்டத்தை எழுதினீர்கள்’ என்று கேட்டனர். அவா சொன்னார்... ‘ஆம் நான் தான் எழுதினேன். அதை எரிக்கும் முதல் ஆளாக நான்தான் இருக்கப் போகிறேன்’ என்று. அரசியல் வரைவு குழுவிற்குள் நுழைந்தபோது, என்னுடைய மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை தவிர, எனக்கு வேறு எந்த ஆசையும் இருக்கவில்லை என்று சொன்னார்.

‘பெட்டி திருட்டுப் போனாலும் சாவி என்னிடம் இருக்கிறது என்றானாம் நாயர்’ என்று மலையாள பழமொழி ஒன்று இருக்கிறது. அதுபோல அரசியல் சட்டத்திற்கு விளக்கம் சொல்பவர்கள் பார்ப்பனர்களாக இருக்கிறார்கள். ஆனால் எழுதப்பட்ட அரசியல் சட்டங்களில் பலவற்றை அம்பேத்கர் செய்தார். எட்டு மணி நேர வேலை என்பதை வலியுறுத்தி, பிரஞ்சு இந்தியாவில் பாண்டிச்சேரியில் மட்டும் ஒரு போராட்டம் நடந்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் யாரும் போராடவில்லை. அம்பேத்கர் தொழிலாளர் துறை அமைச்சராக இருந்தபோது, அதற்கான சட்டத்தை கொண்டு வந்தார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் செய்ததா அது? பெண் ஊழியர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்பதை கொண்டு வந்தவர் புரட்சியாளர் அம்பேத்கர் தான்.

அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் தான் அம்பேத்கர் இட ஒதுக்கீட்டை வைத்தார். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு வைக்கவில்லை என்று அவர் மீது ஒரு குற்றச்சாட்டு வைக்கிறார்கள். இதில் நாம் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். அப்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் பட்டியல் இருந்தது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பட்டியல் இல்லை. 1935 ஆம் ஆண்டு சட்டத்திற்கு முன்னாலேயே இரண்டு பட்டியலை தயாரித்து இருந்தார்கள். ஒன்று தீண்டாமைக்கு உட்பட்ட மக்கள், மற்றொன்று பொதுச் சமுதாயத்திலிருந்து விலகி, தனித்து வாழும்

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# சாதி ஒழிப்பே உண்மை விடுதலை

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள். இந்த மக்களை பட்டியல் இன மக்கள் என தனியாக பிரிந்தார்கள். இந்த பட்டியலில் இருந்தவர்களுக்கான இடத்தை ஒதுக்கி அவரால் எழுத முடிந்தது. பட்டியலில் இல்லாத பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அரசியல் சட்டத்தில் 340 என்ற ஒரு பிரிவை எழுதினார். அரசு ஒரு ஆணையத்தை அமைத்து, சமுதாயத்திலும், கல்வியிலும் பின் தங்கியிருக்கும் மக்களின் பட்டியலை தயாரித்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்பதுதான் அந்த 340 ஆவது பிரிவு. எழுதியதோடு நிற்கவில்லை. அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகளில் அவர் பதவியில் இருந்து விலகினார். பதவியில் இருந்து விலகுவதற்கு சில காரணங்களை கடிதத்தில் எழுதியிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஆணையம் அமைத்து, அவர்களின் மேம்பாட்டிற்கு செயல்பட வேண்டும் என்று சட்டம் இயற்றி ஒன்றரை ஆண்டுகள் ஆகியும், அதற்கான ஆணையம்கூட அமைக்கவில்லை என்பது, அவர் பதவி விலக எழுதிய காரணங்களில் ஒன்று. இப்படிப்பட்டவரைத்தான் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர் என்று சொல்கிறார்கள்.

இந்துமத புதிர்கள் என்று எழுதினார். இடஒதுக்கீடு என்பதைகூட, பதவி பெறும் நோக்கத்திற்காக அவர் சொல்லவில்லை. அனைத்து சமுதாய மக்களுக்கும், ஆட்சியிலும், அதிகாரங்களிலும் பங்கு இருக்க வேண்டும் என்பதுதான் அதற்கு அவர் கொண்ட பொருள். அவர் சொன்ன முறையும், அவருக்கு பின்னால் வந்தவர்கள் அதை எடுத்துக் கொண்ட முறையும் வெவ்வேறாக இருக்கிறது. நவீனத்துவத்தின் எதிரியாக இருந்தவர் காந்தி. அவருக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்கான அடையாளமாக, மிடுக்கான உடையோடும், பெருமித தோற்றத்தோடும் அம்பேத்கர் இருந்தார். அது அவர் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல. ஆனால், அவருக்கு பின்னால் வந்த தலைவர்கள் அவரை போல் உடைகளை, காலணிகளை அணிவதுதான் அம்பேத்கரியம் என்று கருதிக் கொண்டார்கள். அவர் ஆட்சி அதிகாரத்தை, அரசியல் அதிகாரத்தை சமூக விடுதலைக்கு ஒரு வழியாக மட்டும் வைத்திருந்தார். இப்போது இவர்கள் அதை முடிந்த முடிவாக ஒரே இலட்சியமாக எடுத்துக் கொண்டுவிட்டார்கள். சமுதாயத்தின் மீது அவர் வைத்த பார்வை என்னவாக இருந்தது என்பதில் இருந்துதான் அம்பேத்கரை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய நாட்டின் விடுதலை பற்றி பேசுகிறபோது, இந்திய விடுதலைக்கு எதிரானவர்கள் என்ற குற்றச்சாட்டு பெரியார் மீதும், அம்பேத்கர் மீதும் உண்டு.

காங்கிரசை எப்போதும் எதிர்த்து வந்த அம்பேத்கர், காந்தியும், காங்கிரசும் தீண்டதகாதவர்களுக்கு செய்தது என்ன? என்று ஒரு புத்தகமாக எழுதி, இந்த மக்களுக்கு காந்தியும், காங்கிரசும் செய்த துரோகங்களை பட்டியலிடுகிறார். பல வீடுகளின் முன்னால் நாய்கள் இருக்கிறது எச்சரிக்கை என்ற பொருளில் "பிவேர் ஆப் டாக்ஸ்" என்று எழுதியிருப்பதைப்போல், அந்த புத்தகத்தின் இறுதி அத்தியாயத்திற்கு முந்தைய அத்தியாயத்தில்,"பிவேர் ஆப் காந்தி" என்ற தலைப்பை அம்பேத்கர் எழுதியுள்ளார். தாழ்த்தப்பட்டவர் முன்னேற்றத்திற்காக பல முயற்சிகள் எடுத்ததில் ஒன்றாகத்தான், 1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு சென்று பல செய்திகளை எடுத்து வைத்தார். காங்கிரஸ் அப்போது கலந்து கொள்ளவில்லை.1931 ஆம் ஆண்டு தான் காந்தி - இர்வின் ஒப்பந்தத்தின்படி வட்டமேசை மாநாட்டில் காந்தி கலந்து கொள்கிறார். (உப்பு சத்தியாகிரக போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யக் கோரி, இனி போராட்டம் நடத்த மாட்டோம் என்றும், வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்கிறேன் என்றும் போடப்பட்டதுதான் "காந்தி-இர்வின் ஒப்பந்தம்")

1930 ஆம் ஆண்டு வட்டமேசை மாநாட்டிற்கு செல்வதற்கு முன்னால் காந்தியை சந்தித்து பல விவாதங்களை செய்து, நீங்கள் ஏன் எப்போதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு துரோகமே செய்கிறீர்கள் என்று கேட்டு விட்டுத்தான் அம்பேத்கர் மாநாட்டிற்குப் போனார். அந்த மாநாட்டில் அம்பேத்கர் வைத்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட பிரதமர், தாழ்த்தப்பட்டவர்களுக்கு இரட்டை வாக்குரிமை தனித்தொகுதி உண்டு என அறிவித்தார். அப்படி கூடாது என்று போராடினார் காந்தி. இசுலாமியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் தனித் தொகுதியை ஏற்றுக் கொண்ட காந்தி, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்குவது, இந்துக்களை பிரிக்கும் சூழ்ச்சி என்றார். அம்பேத்கர் கேட்டார்..."இது வந்து தானா இந்துக்களை பிரிக்கப் போகிறது? நீங்கள் என்ன இணைத்தா வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? எப்போதும் எங்களை அரவணைத்துக் கொண்டா இருக்கிறீர்கள்? எப்போதும் பிரிந்திருக்கிற நாங்கள், இப்போதும் பிரிந்திருந்து நாங்கள் பெறப் போகும் மேம்பாட்டை ஏன் தடுக்கிறீர்கள்?" என்று.

சாகும் வரை உண்ணாவிரதம் என்று அறிவித்த காந்தியை பார்த்து அம்பேத்கர் கேட்டார்....."நீங்கள் எப்போதாவது உங்களின் உச்சபட்ச கோரிக்கையான இந்திய நாட்டின் விடுதலைக்காக உண்ணாவிரதம் இருந்திருக்கிறீர்களா? எங்கள் உரிமையை பறிப்பதற்காக உண்ணாவிரதம் இருக்கிறீர்களே" என்று."ஏழு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளைவிட, ஒரு காந்தியின் உயிர் பெரிதல்ல, உறுதியாக நில்லுங்கள்" என்று. அப்போது வெளிநாட்டில் இருந்த பெரியார் அம்பேத்கருக்கு தந்தி கொடுத்தார். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் உரிமைகளை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. தொடர்ச்சியாக காந்தியின் சூதான போக்கினை எதிர்த்து நின்ற தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும்.

இந்த சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ள மக்களின் உரிமையைப் பற்றி, அவர்களுக்கான மேம்பாட்டு திட்டங்களை ஆய்வு செய்வதற்காக வந்ததுதான் சைமன் கமிஷன். அதை வரவேற்றவர்கள் இந்தியா முழுவதும் இரண்டே தலைவர்கள் பெரியாரும் அம்பேத்கரும் தான். எல்லோரும் எதிர்த்தார்கள். பெரியார் ஆதரித்து வந்த நீதிக் கட்சியும் எதிர்த்தது. அப்போது பெரியார் எழுதினார்..."சைமன் கமிஷனில் இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை என்ற காரணத்தைச் சொன்னார்கள். மிண்டோ மார்லிக், மாண்டேகு சேம்ஸ்போர்டு வந்தபோதெல்லாம் கேட்காமல், இப்போது மட்டும் ஏன் கேட்கிறாய்? ரவுலட் சட்டத்தை ரவுலட் மட்டுமா எழுதினான்? குமாரசாமி சாஸ்திரியும் சேர்ந்துதானே எழுதினான். அதனால் என்ன பலன் கிடைத்தது? அவன் வீட்ல நான்கு பேருக்கு வேலை கிடைத்தது. நல்லது வந்தா மட்டும் நீ ஏற்றுக் கொள்கிறாய். கெட்டது வந்தா வாயை மூடிக் கொள்கிறாயே. நல்ல வேளையாக இந்தியர்கள் யாரையும் நியமிக்கவில்லை. நியமித்திருந்தால் பார்ப்பானை தான் நியமித்திருப்பான். அவன் எங்களுக்கு எதிராகத்தான் இருந்திருப்பான். எனவே இதை நான் வரவேற்கிறேன்" என்று எழுதினார்.

இரண்டாம் உலகப் போரில், இந்தியப் படையை ஆங்கில அரசு போரில் ஈடுபடுத்தியது. இதனால் இந்தியர்களுக்கு என்ன லாபம் என்று கண்டித்து காந்தி அறிக்கை விட்டார். எப்போதும் காந்தியை எதிர்க்கும் அம்பேத்கர் அப்போது வரவேற்றார். காந்தியார் கேட்ட கேள்வியில் நியாயம் இருக்கிறது வரவேற்கிறேன், அதே சமயத்தில் காந்தியாரிடம் எனக்கு ஒரு கேள்வி இருக்கிறது. இந்திய விடுதலைப் போரில் தாழ்த்தப்பட்டவர்களை ஈடுபடுத்துகிறீர்களே! அதனால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு என்ன லாபம் இருக்கிறது என்று கேட்டார். அதைத்தான் இன்றும் சொல்கிறோம். தமிழ் தேசியம் பேசுகிற பல பேர் சிக்கல் இல்லாத பிரச்சினை என்பதற்காக பேசிக் கொண்டிருக்கிறார்கள். சாதி இல்லை என்று பேசினால்தான் சிக்கல் வரும். தமிழ் தேசியம் என்று சொன்னால் எந்த சிக்கல்களும் இல்லை. இந்திய நாட்டு விடுதலையின்போது அம்பேத்கர் கேட்டார். தமிழ்நாட்டிற்கு விடுதலை விரும்புகிற நாம் கேட்கிறோம், சாதி ஒழிப்பு இல்லாத தமிழ்நாட்டு விடுதலையில் நமக்கென்ன இருக்கிறது? சாதி ஒழிப்பை இலக்காகக் கொண்ட, அதை நோக்கமாகக் கொண்ட, அதை போராட்டத்தோடு இணைத்துக் கொண்ட தமிழ்நாட்டு விடுதலைக்கு நாம் போராடுவோம்.

பெரியார் கேட்ட தனித் தமிழ்நாடு, சாதி ஒழிந்த, பாலியல், பொருளியல் பேதமொழிந்த - பொது உரிமை கொண்ட பொதுவுடைமை சமத்துவ சமுதாயத்தைப் படைக்க வேண்டும் - தடையாகவே விளங்கும் பார்ப்பன, பனியா கும்பலிடம் இருந்து பிரிந்து, வடவர் சுரண்டலற்ற நாட்டை உருவாக்க வேண்டும் என்பதே பெரியார் கேட்ட தனிநாடு. சாதி ஒழிப்பே உண்மை விடுதலை என்பதை ஏற்றுக் கொள்வோம் என்று கூறி விடைபெறுகிறேன்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 99416 13535

# கோவையில் எழுச்சி





அய்.நா.வின் அறிக்கையை தொடர்ந்து போர்க் குற்றவாளி ராஜபக்சே மீது பன்னாட்டு விசாரணை நடத்தக் கோரி 21.4.011 வியாழன் காலை 11 மணி அளவில் கோயம்புத்தூர், செஞ்சிலுவை சங்கம் முன்பு கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சுசி. கலையரசன், கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, கதிரவன், மாவட்ட நிர்வாகிகள் து. இராமசாமி, கலங்கல் வேலு, சண்முக சுந்தரம், நாகராசு, அகில் குமரவேல், மாநகரத் தலைவர் வே.கோபால், செயலாளர் இ.மு.சாஜித், பொருளாளர் இரா. இரஞ்சித் பிரபு, இளங்கோ, சீனிவாசன், பத்ரன், நாம் தமிழர் கட்சி கணேசு, வகாப், முருகன், கோப்மா கருப்புசாமி, ஆதித் தமிழர் பேரவை தீபா, மாணிக்கம், சமத்துவ முன்னணி கார்க்கி. பொன். சந்திரன், வழக்கறிஞர்கள் சி. முருகேசன், நிக்கோலசு, ஆனந்தராசு (நாம் தமிழர்), சி.கே.எம். தமிழ்ச்செல்வி ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 05th May 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மே 12, 2011 | புரட்சி 10 | முழக்கம் 17 | விலை: ரூ.2.50


## இராஜபக்சேயைக் கூண்டில் ஏற்று; பொள்ளாச்சியில் ஒரே நாளில் 10,000 கையெழுத்துகள்

# கோவையில் மாபெரும் மனித சங்கிலி






*போர்க் குற்றவாளி இராஜபக்சேயை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தக் கோரி தமிழகம் தழுவிய கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது. மேட்டூர், பொள்ளாச்சி, சென்னை, மயிலாடுதுறை நகரங்களில் கையெழுத்து இயக்கத்தை தோழர்கள் தொடங்கியுள்ளனர். கோவையில் கழகத்தின் முயற்சியால் மாபெரும் மனித சங்கிலி நடந்துள்ளது.*

போர்க் குற்றங்களை மீறி மனித குலத்தின் அழிவுக்குக் காரணமான இலங்கை அதிபர் இராஜபக்சேவை சர்வதேச நீதிமன்ற குற்றவாளி கூண்டில் நிறுத்தி, அவருக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும், இதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த இந்திய அரசு அய்க்கிய நாடுகள் சபையை வலியுறுத்த வேண்டும் என்றும், இலங்கைக்கு ஆதரவாக இந்தியா ஒரு போதும் செயல்படக் கூடாது என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோயம் புத்தூர், காந்திபுரத்தில் கழகப் பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையில் பல்வேறு கட்சிகள் பங்கேற்ற மனிதச் சங்கிலி போராட்டம் 2.5.2011 மாலை 5 மணிக்கு தொடங்கி 6 மணி வரை மிக எழுச்சியுடன் நடைபெற்றது.

மனித சங்கிலிப் போராட்டம், காந்திபுரம், கிராஸ்கட் சாலை, லட்சுமி வணிக வளாகம் முன்பிருந்து, அலங்கார் ஓட்டல் பிரிவு வரை நின்றது. இந்தப் போராட்டத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதுடன், இராஜபக்சேவுக்கு எதிராக முழக்கமிட்டனர். "தண்டனை வழங்கு! தண்டனை வழங்கு! போர் குற்றவாளி இராஜபக்சேவுக்கு தண்டனை வழங்கு!!", "பச்சிளம் பாலகர்களை கொன்று குவித்த இராஜபக்சேவுக்கு தண்டனை வழங்கு!" என்றும் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் கழுத்தில் மாட்டியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, வடக்கு மாவட்டத் தலைவர் இராமசாமி, செயலாளர் வெள்ளமடை நாகராசு, பொறுப்பாளர் சண்முக சுந்தரம், பொருளாளர் மாவீரன் மதியழகன், மாநகர தலைவர் வே.கோபால், மாநகர செயலாளர் இ.மு.சாஜித், மாநகர பொருளாளர் இரா. இரஞ்சித் பிரபு, அலுவலக பொறுப்பாளர் சா.கதிரவன், தெற்கு மாவட்டத் தலைவர் கலங்கல் வேலுச்சாமி, செயலாளர் கா.சு.நாகராசு, துணைச் செயலாளர் சூலூர் பன்னீர் செல்வம், பொருளாளர் அகில் குமாரவேல், தமிழ்நாடு மாணவர் கழகம் பன்னீர்செல்வம், தமிழினியன், நேருதாசு, ம.தி.மு.க.- மாநகர் மாவட்ட செயலாளர் ஆர்.ஆர். மோகன் குமார், புற நகர் மாவட்டச் செயலாளர் ஈஸ்வரன், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கிருட்டிணசாமி, தியாகராஜன், கணபதி செல்வராஜ், வக்கீல் சூரி நந்தகோபால், முன்னாள் எம்.பி. கிருஷ்ணன், விவசாய அணி சூலூர் பொன்னுசாமி, அர்ஜுனன், மாமன்ற உறுப்பினர் தங்க வேலு, அற. சண்முகம், விஜய குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி - மாவட்டச் செயலாளர் சுசி. கலையரசன், கோவை சம்பத், விடுதலை சிறுத்தைகள் தொழிலாளர் முன்னணி -மாவட்ட செயலாளர் மோசஸ், இளைஞரணி செயலாளர் பாலசிங்கம், பாட்டாளி மக்கள் கட்சி - மாநில துணைப் பொதுச் செயலாளர் ஆ. தங்கவேல் பாண்டியன், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஜி.எஸ். குமார், ரமேஷ், மெகராஜுதீன், பூபதி, கணேசன், செல்வம், தங்கவேல், கண்ணப்பன், மனித நேய மக்கள் கட்சி - எம்.எச். அப்பாஸ், டி.எம்.எஸ். அப்பாஸ், பர்க்கத் அலி, அமானுல்லா, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகம் - எம். சுலைமான். நாம் தமிழர் கட்சி - மாவட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்ச் செல்வன், புறநகர் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆனந்தராசு, சோஷியல் டெமாக்ரூரட்டிக் பார்ட்டி ஆப் இந்தியா - மாவட்ட செயலாளர் என்.கே. அஷ்ரப், மாவட்டத் தலைவர் வி.எம்.அபுதாகிர், தமிழ் தேசிய பொது உடமை கட்சி - தமிழரசன், சங்கர், அருந்தமிழர் பேரவை - இளவேனில், அம்பேத்கர் முற்போக்கு தொழிலாளர் சங்கம் - மகேந்திரன், மதி, தமிழர் விடுதலை இயக்கம் - ஒருங்கிணைப்பாளர் வெண்மணி. ஆதித் தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் கரு.மாணிக்கம், களப்பிரர் , தீபா, குப்புராசு, இந்து மக்கள் கட்சி, சட்டக் கல்லூரி மாணவர்கள், அனைத்துக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர்களும், பொது மக்களும் பெருந் திரளாக கலந்து கொண்டனர்.

### கையெழுத்து இயக்கம்

#### மேட்டூரில்

அய்.நா. மன்றமே! ஈழத் தமிழர்களை இனப் படுகொலை செய்த இராஜபக்சே கும்பல் மீது போர்க் குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி, உடனே நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி மேட்டூர் பேருந்து நிலையத்தில் 9.5.2011 மாலை 6 மணியளவில் தொடங்கி இரவு வரை பொது மக்களிடம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில் கழக மாவட்ட தலைவர் செ. மார்ட்டின், மேட்டூர் நகர தலைவர் அ. அண்ணா துரை, மாவட்ட பொருளாளர் சி. கோவிந்தராசன், நகர பொருளாளர் செ. கணேசன், ஆசைதம்பி, பிரவின் குமார், ஆர்.எஸ். பகுதி தோழர்கள் நாகராசு, இராசசேகரன், அருள்செல்வன், இராமச் சந்திரன், குமரப்பா, தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

#### பொள்ளாச்சியில்

நாடு கடந்த தமிழீழ அரசின் சார்பாக போர்க் குற்றவாளி இராஜபக்சேயை விசாரணை மன்றத்தில் நிறுத்த வலியுறுத்தி ஐ.நா. பொதுச் செயலாளருக்கு

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

# பேராயுதமாய் கிடைத்துள்ள உச்சநீதிமன்றத் தீர்ப்பு

*தமிழ்நாட்டு கிராமங்களில் சாதியத்தின் கொடூர வடிவமான தீண்டாமை, பல்வேறு வடிவங்களில் தலைவிரித்தாடுவதை எதிர்த்து, பெரியார் திராவிடர் கழகம் எடுத்த நேரடி நடவடிக்கைகள், பரப்புரை இயக்கங்கள், நல்ல தாக்கங்களை உருவாக்கி வருகிறது. இரட்டை தம்ளர் முறையைப் பின்பற்றும் தேநீர்க் கடைகளின் பட்டியலை கிராமம் கிராமமாக சேகரித்து, அவற்றை அகற்ற உரிய கால அவகாசம் தந்து இறுதியில் காந்தி பிறந்த நாளில் இரட்டை தம்ளர்களை உடைக்கும் போராட்டத்தை கழகம் நடத்தியது. இரண்டாம் கட்டமாக தமிழகம் முழுதும் ஒரு மாத காலம் தொடர்ந்து பரப்புரைப் பயணங்களை நடத்தி, சாதி தீண்டாமைக் குற்றங்களைத் தடுப்பதற்காகவே உள்ள காவல்துறை பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தை திருச்சியில் கழகம் நடத்தி, ஏராளமான தோழர்கள் கைதானார்கள். இந்த ஒடுக்குமுறைகள் தமிழக கிராமங்களில் இயல்பான வாழ்க்கை முறையாகவே பார்ப்பனிய சாதி ஆதிக்கவாதிகளால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.*

*இந்த நிலையில் கழகம் முன் வைத்த மனித உரிமைக் குரலின் நியாயத்துக்கு அண்மையில் வெளிவந்த உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு வலிமை சேர்த்திருக்கிறது. மதுரை அருகே 'ஜல்லிக்கட்டு' நடந்தபோது ஏற்பட்ட சாதிக் கலவரம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் வந்த வழக்கில் ஏப்.19 ஆம் தேதி உச்சநீதிமன்ற நீதிபதி மார்க்கண்டயே கட்ஜு தலைமையிலான அமர்வு வழங்கியுள்ள தீர்ப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இதே நீதிபதி சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த காலத்தில்தான் பெரியார் திராவிடர் கழகம் இரட்டை தம்ளர் உடைப்புப் போராட்டத்தை நடத்தியது.*

*தமிழ்நாட்டில் – தலித் மக்களுக்கு தேநீர்க் கடைகளில் தனிக் குவளைகளில் தேநீர் வழங்கும் முறை நடைமுறையில் இருப்பதை நீதிபதி தீர்ப்பில் சுட்டிக்காட்டியதோடு கடுமையான கிரிமினல் சட்ட நடவடிக்கைகளை குற்றம் இழைத்தோர் மீது எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.*

*இதுமட்டுமல்ல; இன்னும் ஒரு படி மேலே சென்று, "குற்றங்களைத் தடுக்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உண்டு. அதிகாரிகளின் நிர்வாக வரம்புக்குட்பட்ட பகுதிகளில் இந்தக் குற்றங்கள் நடப்பது தெரிந்திருந்தும் நடவடிக்கை எடுக்காதிருந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியாகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உச்சநீதிமன்ற நீதிபதி கண்டிப்பான ஆணையாகவே தீர்ப்பில் கூறியுள்ளார். சாதி – தீண்டாமைக் குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்காத காவல்துறைப் பிரிவை இழுத்து மூடுவோம் என்று பெரியார் திராவிடர் கழகம் முன் வைத்த அதே கோரிக்கையின் நோக்கத்தை உச்சநீதிமன்றமே இப்போது ஆணையாக தனது தீர்ப்பில் வலியுறுத்தியிருப்பது பெரியார் திராவிடர் கழக போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியேயாகும்.*

*அண்மையில் மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே உள்ள வில்லூர் எனும் கிராமத்தில் பார்ப்பனிய சாதி ஆதிக்கவாதிகள் இழைத்து வரும் தீண்டாமைக் கொடுமைகள் பற்றிய அதிர்ச்சியான செய்திகள் வெளி வந்துள்ளன. இந்த கிராமத்தில் தலித் தோழர்கள் எவரும் சாதி இந்துக்கள் வீதி வழியாக, இரு சக்கர வாகனங்களில் செல்லக் கூடாதாம். மீறிச் சென்றால் – ஊர்ப் பழக்கத்தை மாற்றக் கூடாது என்று, சாதி ஆதிக்க வாதிகள் தாக்குவார்கள்; அதே போல் தலித் மக்கள் பார்ப்பனிய சாதி ஆதிக்கவாதிகள் வாழும் வீதி வழியாக வேட்டி கட்டிக் கொண்டு போகக் கூடாதாம். மீறி வேட்டி கட்டிக் கொண்டு போனால், வேட்டியை உருவி விடுவார்களாம்; வேட்டி சட்டைகளை தலித் மக்கள் எந்த முறையில் எந்த வடிவில் அணிய வேண்டும் என்பதை சாதி ஆதிக்கவாதிகளே தீர்மானிப்பார்களாம். இரு சக்கர வாகனத்தில் தலித் ஒருவர் சென்றதற்காக சாதி ஆதிக்கவாதிகள் தாக்குதல் நடத்தி, அது கலவரமாக மாறி, காவல்துறையினர் மீதே சாதி ஆதிக்கவாதிகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து 53 பேர் மீது 8 பிரிவுகளில் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து கடும் நடவடிக்கை எடுத்துள்ளனர். தீண்டாமை எந்த வடிவத்தில் செயல்படுத்தப்பட்டாலும், காவல் துறை இரும்புக் கரம் கொண்டு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று தெற்கு மண்டல காவல்துறை உயர் அதிகாரி எம்.என். மஞ்சுநாதா, செய்தியாளர் களிடம் கூறியுள்ளார்.*

*வில்லூரில் நடந்து வரும் இந்த சாதி தீண்டாமை ஒடுக்குமுறைகளை மதுரை மாவட்ட காவல்துறை அதிகாரிகள் மூடி மறைத்து வந்துள்ளனர். இந்த நிலையில் காவல்துறை கூடுதல் இயக்குனர் இராதாகிருஷ்ணன், கடந்த மே 3 ஆம் தேதி வில்லூர் வந்து கலவரம் நடந்த இடங்களைப் பார்வையிட்டு, குற்றத்தை மறைத்த மாவட்ட காவல்துறை ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர், கண்காணிப்பாளர் ஆகியோர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க நடவடிக்கையாகும். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு நல்ல தாக்கத்தை உருவாக்கத் தொடங்கியிருக்கிறது.*

*இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி தீண்டாமை வடிவங்களுக்கு எதிரான போராட்டத்தை மேலும் தீவிரமாக முன்னெடுக்க வேண்டிய கடமையை பெரியார் திராவிடர் கழகம் ஆற்ற வேண்டியிருக்கிறது. உச்சநீதிமன்றத் தீர்ப்பின் நகல், மாவட்டக் கழகக் கூட்டங்களில் கழகப் பொறுப்பாளர்களிடம் கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கி வருகிறார். நடவடிக்கை எடுக்காத காவல்துறை அதிகாரிகளிடம் இத் தீர்ப்பின் நகல்களை வழங்கி, உச்சநீதிமன்ற ஆணையை நினைவூட்டி நடவடிக்கை எடுக்கச் செய்வது தோழர்களின் கடமையாகும்.*

*பெரியார் திராவிடர் கழகம் தொடங்கிய சாதி தீண்டாமை எதிர்ப்பு இயக்கம் வீணாகிவிடவில்லை. நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. பார்ப்பனிய சாதி தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களை மேலும் தீவிரப்படுத்த அணியமாவோம்!*

# இலங்கை அதிபர் – இராணுவத்தினருக்கு எதிராக நார்வேயில் வழக்கு

*இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலைக்கு பொறுப்பானவர்களான இலங்கையின் அதிபர் இராஜபக்சே, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய இராஜபக்சே, பாலித கோகனா மற்றும் சரத் பொன்சேகா உட்பட 17 இராணுவத் தளபதிகள் என மொத்தம் 21 நபர்கள் மீது நார்வே ஈழத் தமிழர் அவை வழக்குத் தொடுத்துள்ளது.*

*நார்வே நீதிமன்றம் குற்றம்சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது சர்வதேச பிடியாணை பிறப்பித்து, அவர்களை உரிய முறையில் விசாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கினால், யுத்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட இலங்கைஅரசு அதிகாரிகள் வெளிநாடுகளில் கைது செய்யப்படும் ஆபத்து இருக்கிறது.*

*2008-2009 ஆம் ஆண்டு காலத்தில் நடந்த வன்னிப் போரின்போது பாதிக்கப் பட்டவர்கள் / பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் என 15 நபர்களின் சாட்சியங்கள் திரட்டப்பட்டு இவ்வழக்கை நார்வே ஈழத் தமிழர் அவை முன்னெடுத்துள்ளது.*

*2009 ஆம் ஆண்டு தொடக்கத்தில் வன்னிக்கு மருந்துகள் செல்வதை இலங்கை அரசு தடை செய்தது. அதனால், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதுடன் ஆயிரக்கணக்கானவர்கள் உயிர் இழக்கவும் நேர்ந்தது. அப்படி பாதிக்கப்பட்டு வன்னியில் இறந்த நார்வே குடியுரிமை பெற்றிருந்த ஈழத் தமிழர் ஒருவர் மரணமடைந்தார். இவ்வழக்கினை ஈழத் தமிழர் அவையின் சார்பாக நார்வே நாட்டு வழக்கறிஞர் ஹரால்ட் ஸ்தாபெல் தாக்கல் செய்தார்.*

*இவ்வழக்கிற்கு தேவையான சட்ட விவரங்கள், சாட்சியங்கள், ஆவணங்கள் என அனைத்தையும் திரட்ட ஒரு வருட காலமானது. இவ்வழக்கு தொடர்பாக நார்வே நாட்டு ஊடகமான 'அவ்தன் போஸ்டனுக்கு' கருத்து தெரிவித்த நார்வே வழக்கறிஞர் மரியா பெங்கிராம் ஆஸ், "நார்வே குடியுரிமை பெற்ற ஒரு தமிழர் யுத்தக் குற்றத்தினால் மரணமடைந்திருப்பதால் இவ்வழக்கு நார்வேயில் விசாரிக்கப்பட்டே ஆகவேண்டும்" என்று கூறினார். நார்வேயில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கைப் போன்றே பல்வேறு நாடுகளில் 30-க்கும் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்படவிருக்கிறது.*

# மலைவாழ் மக்களின் மயானத்தை மீட்டுத் தர வலியுறுத்தி ஆனைமலையில் கழகம் ஆர்ப்பாட்டம்



*ஆனைமலைக்கு அருகிலுள்ள கள்ளிமேட்டுப்பதி மலைவாழ் மக்களுக்கு சாலை, போக்குவரத்து, கல்வி, மருத்துவம் உள்ளிட்ட எந்த அடிப்படை வசதிகளையும் இதுவரை அரசு செய்து தரவில்லை. அரசின் சார்பில் இம்மக்களின் பயன்பாட்டிற்கென 3 ஏக்கர் நிலம் மயான பூமியாக வழங்கப்பட்டிருந்தது. இந்நிலத்தை அருகிலுள்ள தனியார் தோட்ட உரிமையாளர்கள் ஆக்கிரமித்துக் கொண்டனர். அடிப்படை வசதியுமில்லாமல் மயானமுமில்லாமல் துன்பப்பட்டு வந்த இம்மக்கள் தொடர்ந்து அரசுக்கு பல்வேறு மனுக்களை அனுப்பியும் இதுவரை எந்த உபயோகமுமில்லை. இதனால் சுள்ளிமேட்டுப்பகுதி மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆனைமலை, நகர ஒன்றிய கழகங்களின் சார்பாக கடந்த 7.5.2011 அன்று காலை முக்கோணம் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*கோவை மாவட்ட கழகத் தலைவர் கலங்கல் வேலுச்சாமி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 100-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் பங்கேற்றனர். கழகம் சார்பில் சூலூர் பன்னீர்செல்வம், சி. விசயராகவன், கா.சு. நாகராசன், வே. வெள்ளியங்கிரி, வே. அரிதாசு, அப்பாதுரை, மணிமொழி, ஆனந்த், சம்பத், கண்ணன், சீனிவாசன் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தோழர்களும், ஆதித் தமிழர் பேரவையின் சார்பாக தோழர் தி.செ. கோபால் ஆகியோர் பங்கேற்றனர்.*

## நன்கொடை

*24.4.2011 அன்று கடலூர் சுப்பராயலு திருமண மண்டபத்தில் கி.சதீஷ்குமார் - செ. சரண்யா ஆகியோரின் மணவிழா முனைவர் அ. குமாரராசா தலைமையில், தணிக்கை யாளர் ந.இராசாராமன் முன்னிலையில் நடைபெற்றது. ம.தி.மு.க. வெளியீட்டு செயலாளர் ஆ. வந்தியதேவன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரைத்தனர். மணவிழா நினைவாக 'புரட்சிப் பெரியார் முழக்கம் இதழ் வளர்ச்சிக்கு ரூ.100 நன்கொடை வழங்கப்பட்டது.*


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 99416 13535

# குஜராத்தில் மோடி நல்லாட்சி நடத்துகிறாரா?

*2002 ஆம் ஆண்டில் இஸ்லாமிய இனப் படுகொலையை நடத்தியவர் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி. இப்போது, அவர், இந்தியா விலேயே நல்லாசி நடத்தி, சாதனை படைப்பதாக பார்ப்பன ஏடுகளும், 'இந்துத்துவா' சக்திகளும் புகழ் மாலை சூட்டத் தொடங்கியிருக்கின்றன. தமிழின உரிமை பேசும் நமது தோழர்களும்கூட இந்த பிரச்சார மாயை உண்மையென நம்பி மோடிகளின் புகழ் பாடத் தொடங்கியிருக்கிறார்கள். மோடி குஜராத்தில் நடத்தும் ஆட்சியின் கதை என்ன? அதையும் பார்ப்போம்.*

பிரபல இந்தி நடிகையான ஷெர்லின் சாப்ரா என்பவர், குஜராத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய போது, நரேந்திர மோடியைத் தூக்கி வைத்துப் புகழ்ந்து, தான் அவரை சந்தித்ததே இல்லை என்றும், அவரிடம் உதவியாளராகப் பணியாற்றக் கூட தயாராக இருப்பதாகவும் பேசினார். அவர் பேசிய இடம் குஜராத் தொழிலதிபர்கள் நடத்திய நிகழ்ச்சி.

அடுத்ததாக ஊழல் எதிர்ப்பு இயக்கம் தொடங்கியுள்ள அன்னா அசாரேயிடமிருந்து, பாராட்டு மாலை வந்து விழுந்தது. மோடி - குஜராத் மாநிலத்தை வெகுவேகமாக வளர்ச்சிப் பாதையில் அழைத்துப் போகிறார் என்று. தமிழ்நாட்டில், குருமூர்த்திகளும் சோ இராமசாமிகளும் தீவிரப் பரப்புரை செய்து வருகிறார்கள். இந்தியாவின் பிரதமர் பதவி வேட்பாளருக்கு மோடியை முன்னிறுத்துவதே, இந்தப் பரப்புரையின் உள்நோக்கம். இந்த நாடகங்கள் நடந்து கொண்டிருக்கும்போது, மோடியின் உண்மை முகத்தை வெளிப்படுத்தும் மற்றொரு நிகழ்வும் நடந்தது. அதுதான் சஞ்சீவ் ராஜேந்திரபத் என்ற குஜராத்தின் முன்னாள் அய்.பி.எஸ். போலீஸ் அதிகாரி தாமாகவே முனவந்து உச்சநீதிமன்றத்தில் மோடிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்கு. குஜராத் கலவரத்தைப் பற்ற வைத்தவரே மோடி தான் என்பது இவரது குற்றச்சாட்டு.

கலவரத்தின்போது உயர்மட்ட காவல்துறை அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டிய மோடி, 'முஸ்லீம்களுக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்' என்று உத்தரவிட்டார் என்பதே வழக்கு. அந்த உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில், இருந்தவர், இந்த அதிகாரி. கொடூரமான குஜராத் இனப் படுகொலைக் குற்றச்சாட்டுகளிலிருந்து தப்பித்து கரை சேர்ந்து விட்டதாக நம்பிக் கொண்டிருந்த மோடிக்கு, இது ஒரு பேரிடி. இந்த அதிகாரி, பிரமாண வாக்குமூலமாக வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாக்குமூலத்தில் தவறான தகவல் இடம் பெற்றிருந்தால் - அது கடுமையான குற்றமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

சபர்மதியில், கரசேவகர்கள் பயணம் செய்த ரயில் பெட்டி தீ வைக்கப்பட்டதைத் தொடர்ந்து குஜராத் கலவர பூமியானது. அப்படி ஒரு கலவரம் இந்தியாவில் நடந்ததே இல்லை. மூன்றே நாட்களில் குஜராத்தின் 19 மாவட்டங்களில் 2500 முஸ்லீம்கள் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டனர். மோடி அமைச்சரவையில் வருவாய்த் துறை அமைச்சராக இருந்தவர் ஹேரன் பாண்டி. இவர் ஆர்.எஸ்.எஸ். பின்னணியிலிருந்து வந்தவர்தான். அவராலேயே இதை சகித்துக் கொள்ள முடியவில்லை. இந்தப் படுகொலைகள் பற்றி சிறப்பு புலனாய்வுக்குழு உச்சநீதிமன்ற ஆணையின் கீழ் நியமிக்கப்பட்டு விசாரித்தது. ஆனால், ஆட்சி நிர்வாகம் மோடியிடம் இருந்ததால் உயர் அதிகாரிகள் உண்மையை வெளிப்படையாகக் கூறத் தயாராக இல்லை. சிறப்புப் புலனாய்வுக் குழுவும் நேர்மையாக செயல்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்களை சிறப்பு புலனாய்வுக் குழுவே பதிவு செய்ய மறுத்தது. இந்த நிலையில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் பி.பி.சவந்த் மற்றும் ஹோஸ்பர்ட் சுரேஷ் ஆகியோரைக் கொண்ட 'குடிமக்கள் பேராயம்' என்ற சுயேச்சையான விசாரணை மையம் பல உண்மைகளைப் பதிவு செய்து சிறப்பு விசாரணைக் குழுவிடம் அளித்தது.

இந்த நீதிபதிகள் முன் தோன்றி மோடிக்கு எதிராக சாட்சியளித்தவர்களில் ஒருவர் வருவாய்த் துறை அமைச்சர் ஹிரேன் பாண்டியா, பிப். 27 ஆம் தேதி மோடி தனது வீட்டில் நடத்திய கூட்டத்தில் தானும் கலந்து கொண்டதாகவும், அப்போது இந்துக்கள் நடத்தும் தாக்குதல் நடவடிக்கைகளை காவல்துறை



தடுக்க வேண்டாம் என்று - மோடி உத்தரவிட்டதாகவும் கூறினார். பின்னர் மர்மமான முறையில் அவர் கொலை செய்யப்பட்டார். மோடிக்கு ஆதரவாக உண்மைகளை மறைத்த காவல்துறை அதிகாரிகளான பி.சி. பாண்டே, பி.கே. மிஸ்ரா, அசோக் நாராயணன் போன்ற பார்ப்பன அதிகாரிகளுக்கு அவர்கள் பதவி ஓய்வுக்குப் பிறகு, வேறு பதவிகளை பரிசாக வழங்கினார் மோடி. இப்போது மனுதாக்கல் செய்துள்ள காவல்துறை அதிகாரி சஞ்சீவ் ராஜேந்திரபத், மோடி நடத்திய கூட்டத்தில் பங்கேற்கவே இல்லை என்று அரசு தரப்பில் மறுக்கப்பட்டது. அப்போது உளவுத் துறையில் துணை ஆணையாளர் என்ற நிலையில் தான் அவர் இருந்தார். எனவே உயர்அதிகாரிகள் மட்டும் பங்கேற்ற கூட்டத்துக்கு அவர் எப்படி வந்திருப்பார்? என்பது, அரசு தரப்பு எழுப்பும் மறுப்பு. அப்போது உளவுத் துறையின் தலைமை ஆணையர் ஜி.சி. ராஜ்கர் விடுப்பில் இருந்தார். எனவே தன் சார்பாக இராஜேந்திர பத்தை, கலந்து கொள்ளுமாறு அவர் பணித்ததால், பத், அந்தக் கூட்டத்தில் பங்கேற்றார். மோடியின் கட்டுப்பாட்டில் இருந்த சிறப்புப் புலனாய்வுக் குழு இராஜேந்திர பத் அக்கூட்டத்தில் பங்கேற்கவே இல்லை என்று தடாலடியாகக் கூறிவிட்ட பிறகு, நீதிமன்றமும் அதை ஏற்றுக் கொண்ட பிறகு, இப்போது நேரடியாகவே இராஜேந்திர பத் மோடிக்கு எதிரான வலிமையான சான்றுகளுடன் நீதிமன்றம் வந்து விட்டார். இந்த அதிகாரியின் வாகன ஓட்டுனரும், மோடி கூட்டிய கூட்டத்தில், அவர் பங்கேற்றதை உறுதிப்படுத்தியிருக்கிறார். பாதிக்கப் பட்டவர்களுக்காக நீதிமன்றத்தில் போராடி வரும், மனித உரிமைப் போராளியும், பெண் பத்திரிகை யாளருமான தீஸ்த்தா செட்டால் வத், மோடிக்கு எதிராக நேரடியான குற்றச்சாட்டு, இப்போது தான் முதன்முதலாக வந்துள்ளது. உண்மைகள் வெளியே வரத் தொடங்கியுள்ளன என்று கூறியுள்ளார்.

மோடி நிர்வாகத்தில் பணிபுரிந்த சிறீகுமார், ராகுல் சர்மா போன்ற நேர்மையான அதிகாரிகள், கலவரங்கள் பற்றி சிறப்பு புலனாய்வில் பதிவு செய்த உண்மையான தகவல்களும் நிராகரிக்கப்பட்டு விட்டன. உண்மையைப் பேசியதற்காக, மோடி ஆட்சியில், இந்த அதிகாரிகள் பழிவாங்கப் பட்டனர். இந்த சூழ்நிலையில் தனது குற்றச்சாட்டு களுக்கு நீதி கிடைக்குமா என்ற சந்தேகம் ராஜேந்திர தத்துக்கு ஏற்படுவது நியாயம் தானே! அந்த தயக்கமே, அவரை காலம் கடந்து, நீதிமன்றம் வரக் காரணமாக இருந்துள்ளது. இப்போது உச்சநீதி மன்றம் சிறப்பு புலனாய்வுக் குழு அறிக்கையை மட்டுமே ஏற்க வேண்டும் என்ற அவசியமில்லை; சுதந்திரமான அமைப்புகள் நடத்திய விசாரணை களையும் பரிசீலிக்கலாம் என்று அதிரடியாக அறிவித்துள்ளது.

மோடி - குஜராத் கலவரத்துக்குப் பிறகு இரண்டு தேர்தல்களில் வெற்றி பெற்றுவிட்டார். அவர் நாட்டை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென்று, வளர்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்துவதே அவரது வெற்றிக்கான காரணம் என்ற பிரச்சாரம் பார்ப்பன வட்டாரங்களில் தீவிரமாக முடுக்கி விடப்படுகிறது!

பன்னாட்டு நிறுவனங்களின் சுரண்டலுக்கு தாராளமாகக் கதவு திறந்து விட்டுள்ள மோடியை அவர்கள் நடத்தும் ஊடகங்கள் புகழ் பாடுவதில் வியப்பு எதும் இல்லை.

- 'என்.சி.ஏ.பி.ஆர்.' என்ற பொருளாதார ஆய்வு மய்யம் அண்மையில் குஜராத்தில் சிறுபான்மையினர் நிலை பற்றிய ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அறிக்கையாக வெளியிட்டுள்ளது. ஏழ்மை, வறுமை, கல்வியின்மை, பாதுகாப்பற்ற நிலையில் - இந்தியாவிலேயே ஒரிசா, பீகார் மாநிலங்களைப்போல் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் குஜராத்தில் வாழும் முஸ்லீம்கள் என்று அந்த ஆய்வு கூறுகிறது.
- குஜராத்தில் முஸ்லீம்களின் வறுமையின் அளவு உயர்சாதி இந்துக்களைவிட 50 சதவீதம் அதிகம். வங்கிக் கணக்கு வைத்துள்ள முஸ்லீம்கள் எண்ணிக்கை 12 சதவீதம் மட்டுமே. வங்கிக் கடன் வாங்கியவர்கள் 2.6 சதவீதம்.
- தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் முஸ்லீம்கள் புறக்கணிப்பு பெருமளவில் உள்ளது.
- 2002 கலவரத்தால் பாதிக்கப்பட்ட 23000 முஸ்லீம்கள் இப்போதும் தற்காலிக முகாம்களிலேயே அகதிகளாக வாழ்கிறார்கள். நிரந்தர முகாம்கள்கூட அமைக்கப்படவில்லை. பல லட்சம் மதிப்புள்ள வீடுகளை இழந்தவர்களுக்கு அரசு தரும் இழப்பு ஈடு ரூ.10,000 அல்லது ரூ.15,000 மட்டுமே.
- கிராம சாலைகள்; வீடுகளுக்கு மின் இணைப்பு; குடிநீர் இணைப்பு போன்ற அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டிருந்தாலும், மனித சமூக மேம்பாடு வளர்ச்சி மிகவும் குறைவாகவே உள்ளது. காரணம், ஊழல்கள் பெருகி நிற்பது தான்.
- கடந்த 2 ஆண்டுகளில் மூன்று பெரும் ஊழல்கள் நடந்துள்ளன. 17000 கோடி செலவில் குளங்களை வெட்டும் திட்டம் ஒன்று மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் பெயர் 'சுஜாலம் சஃபாலம்'; இதில் வேலை செய்யும் தொழிலாளருக்கு, உள்நாட்டு சந்தையில் கோதுமைக்கான விலை நிர்ணய அடிப்படையில் கூலி வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்களுக்கான ஊதியத்தை மொத்தமாக முன் கூட்டியே ஒப்பந்தக்காரர் களுக்கு அரசு வழங்கி விட்டது. ஆனால் தொழிலாளர்களுக்கு அரிசி விலைக்கான கூலியே தரப்படுகிறது. பல குளங்கள் காகிதத்தில் மட்டுமே வெட்டப்பட்டதாக கணக்கு காட்டப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்காக வழங்கப்பட வேண்டிய அரிசி - பெருமளவில் மகாராஷ்டிராவுக்கு கடத்தப்படுகிறது.
- 2009 இல் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்துக்காக ரூ.260 கோடி ஒதுக்கப்பட்டது. ஆனால், எந்த வேலையும் கிடைக்கவில்லை. வேலை நடப்பதாக கணக்கு எழுதப்பட்டு, பணம் ஒப்பந்தக்காரர்களால் சுருட்டப்பட்டு விட்டது.
- 2010 இல் உருவாக்கப்பட்ட மீன் வளர்ப்புத் திட்ட ஊழல்களால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு ரூ.600 கோடி. இதற்கான டெண்டர் விடப்பட்ட தில் ஊழல்கள் நடந்தன.
- பெருமளவில் அன்னிய தொழில் முதலீடுகளுக்கு குஜராத்தில் மோடி கதவு திறந்து விட்டுள்ளார். அன்னிய முதலீட்டை எதிர்ப்பதாக கட்டுரைகள் எழுதும் பார்ப்பன குருமூர்த்திகள், மோடி அதே வேலையை செய்யும்போது தொழில் வளர்ச்சி என்று பாராட்டுகிறார்கள். குஜராத்தில் 2003 இல் மோடி அன்னிய முதலீடுகளை வரவேற்கும் திட்டத்தைத் தொடங்கியபோது, ரூ.69 கோடி முதலீடு வந்தது. 2005 இல் ஒரு லட்சம் கோடி; 2007 இல் 4 லட்சம் கோடி; 2009 இல் 12 லட்சம் கோடி; 2011 இல் 21 இலட்சம் கோடியாக பன்னாட்டு மூலதனம் அதிகரித்து நிற்கிறது.
- இந்த பன்னாட்டு பெரும் தொழில் நிறுவனங்களுக்கு அவர்கள் விரும்புகிற இடங்களில் நிலம் தாராளமாக ஒதுக்கப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு எந்த வரி விதிப்பும் கிடையாது. தொழிலாளர் நல சட்டங்களிலிருந்தும் விதி விலக்கு. விவசாய நிலங்கள், பழங்குடியினருக்கானவனப் பகுதிகள், பெரும் தொழில் நிறுவனங்களின் வசமாகி விட்டன. சுற்றுச் சூழல் பாதிப்பு காரணமாக நீதிமன்றமே தலையிட்டு, பல தொழிற்சாலைகளை மூட உத்தரவிட்டுள்ளது. உடனே - மோடி ஆட்சி, அவர்களுக்கு வேறு இடங்களை ஒதுக்கித் தருகிறது. இந்த பெரும் தொழில் நிறுவனங்கள் வரத் தொடங்கிய பிறகு, மக்களின் சுகாதாரம், பொருளாதாரம், கல்விச் சேவைகள் மிகவும் குறைந்துவிட்டன. பெண்கள், குழந்தைகள், மைனாரிட்டியினர் வாழ்நிலை

(4 ஆம் பக்கம்)

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# ஓசாமாவின் முடிவு

அல்காய்தா தலைவர் ஓசாமா பின்லேடனை பாகிஸ்தான் நாட்டுக்குள் நுழைந்து அமெரிக்க கப்பல்படை பாகிஸ்தான் நாட்டிற்கு தெரிவிக்காமலேயே சுட்டுக் கொன்றுவிட்டது. பின்லேடன் கொல்லப்பட்டதை அமெரிக்கா கொண்டாடி வருகிறது. ஆப்கானிஸ்தானத்தில் சோவியத் படைகளை வெளியேற்றுவதற்கு இதே ஓசாமாவை அமெரிக்கா தான் வளர்த்து விட்டது. அமெரிக்காவின் எப்.பி.அய். (F.B.I.) உளவு நிறுவனம் வளர்த்துவிட்ட ஓசாமை - பிறகு அதே அமெரிக்காவின் சி.அய்.ஏ. உளவு நிறுவனம் உலகம் முழுதும் வலைவீசி தேடத் தொடங்கி, பாகிஸ்தானில் அவரது கதையை முடித்துள்ளது. ஓசாமா மூச்சு அடங்கிவிட்டதால் அல்காய்தாவின் செயல்பாடுகளும் முடங்கி விடுமா என்பது கேள்விக்குறிதான். **ஓசாமா பின்லேடன்கள் உருவாவதற்கு காரணமான அமெரிக்காவின் கொள்கைகள் வீழ்த்தப்படும்போதுதான் பின்லேடன்கள் உருவாகாமல் இருப்பார்கள் என்பதை அமெரிக்கா உணர வேண்டும்.** பாகிஸ்தான் நாட்டுக்குள் நுழைந்து நேரடி நடவடிக்கை எடுத்ததன் வழியாக அந்நாட்டின் இறையாண்மையில் தலையிட்ட அமெரிக்கா, இப்போது பாகிஸ்தானையே மிரட்டத் தொடங்கியிருக்கிறது.

இந்திராகாந்தி இப்படித்தான் பஞ்சாபில் சீக்கியர்களின் அகாலிதளம் கட்சிக்கு எதிராக பிந்தரன் வாலே என்ற சீக்கிய தீவிரவாதியை உருவாக்கினார். பிறகு பிந்தரன்வாலே இந்திராவுக்கு எதிராகத் திரும்பியபோது இந்திராவின் உத்தரவின்படி ராணுவம் பொற்கோயிலுக்குள் நுழைந்து பிந்தரன் வாலேயை 1984 ஆம் ஆண்டு சுட்டுக் கொன்றது.

அப்பாவி மக்களை கொன்று குவிக்கும் பின்லேடனின் தாக்குதல்களில் நமக்கு உடன்பாடில்லை. பகுத்தறிவாளர் என்ற அடிப்படையில் மற்றொரு கேள்வியையும் கேட்க வேண்டியிருக்கிறது. 'இந்துத்துவா' என்றாலும், 'இஸ்லாமிய அடிப்படைவாதம்' என்றாலும் பகுத்தறிவாளர்கள் அதை ஏற்கவியலாது. ஓர் இறைக் கொள்கையாக தாம் ஏற்ற மதக் கொள்கையை அரசியலில் முன்னெடுத்த பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டபோது, அவர் ஏற்றுக் கொண்டிருந்த இறை நம்பிக்கை அவரைக் காப்பாற்ற முன்வரவில்லையே!

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் பின்னுக்குப் போய்விட்டன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- பெரும் தொழில் நிறுவனங்கள் வந்த பிறகும் வேலை வாய்ப்புகள் அதிகரிக்க வில்லை. படித்த வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சமூக சேவையாளர் தீஸ்கா செடல்வாட் ஆய்வு வழியாக அம்பலப்படுத்தி யுள்ளார்.
- குஜராத்தில் மகுவா பகுதியில் விவசாயிகள் மோடி அரசுக்கு எதிராக கடும் போராட்டங்கள் நடத்தி வருகின்றனர். விவசாயத்தை நம்பி வாழும் இப்பகுதியில் பாசன வசதிக்காக அணைகட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த இடத்தை மோடி பூமிக்கடியில் உள்ள சுண்ணாம்புக் கல்லைத் தோண்டி எடுத்து சோப்பு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அனுமதித்து விட்டதால், அப்பகுதி மக்கள் உள்ளூர் பா.ஜ.க. ஆதரவுடன், மோடியை எதிர்த்து போராடி வருகின்றனர். குண்டர்களை வைத்து போராடும் மக்களை ஒடுக்குகிறது மோடி ஆட்சி. 1400 கோடி செலவில் 214 ஹெக்டர் நிலப்பரப்பில் உருவாகும் இந்தத் தொழிற்சாலைக்காக, 5000 குடும்பங்களைச் சேர்ந்த 30,000 மக்கள் கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.
- சவுராஷ்டிரா பகுதியில் வாங்கனர் மாவட்டத்தில் 'ஓர்பட்' நிறுவனத்துக்கான 40 ஹெக்டர் நிலத்தை ஒரு சதுர மீட்டர் ரூ.40 என்ற விலையில் வழங்கினார் மோடி. அந்தப் பகுதி மக்களின் பாசனத்துக்கும், குடிநீருக்கும் ஆதாரமான இந்த ஒரே இடத்தை பெரும் தொழில் நிறுவனத்துக்கு 'தாரை' வார்த்ததை எதிர்த்து உள்ளூர் மக்கள் கடந்த மார்ச் மாதம் உயர்நீதிமன்றம் போய் தடை வாங்கியுள்ளனர்.
- உதோராவில் உள்ள 'கலாச்சாரம் மற்றும் மேம்பாடு ஆய்வு நிறுவனம்', அரசு ஆவணங்களைக் கொண்டு நடத்திய ஆய்வில், 1947-லிருந்து 2004 ஆம் ஆண்டு வரை குஜராத் மக்கள் தொகையில் வளர்ச்சித் திட்டங்களினால் 5 சதவீத மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதே காலகட்டத்தில் 33 லட்சம் ஹெக்டர் நிலம் பெரும் தொழில் நிறுவனங்களுக்காக கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று கூறுகிறது.
- "சர்வாதிகாரமும் வளர்ச்சியும் கைகோர்த்துக் கொண்டு வரும்போது மக்களுக்கு அத்தகைய ஒரு வளர்ச்சியே தேவை இல்லை. ஜனநாயகம் வாழும் ஒரு சமூகத்தில் வளர்ச்சி சற்று குறைவாக இருப்பினும் அதுவே நன்மை பயக்கும்" என்கிறார் மதச் சார்பற்ற எழுத்தாளரும், சிந்தனையாளருமான ராம் புனியானி.
- மோடிக்கு எதிராக அங்கே எவரும் பேச முடியாது. சட்டமன்றங்கள் அவர் புகழ் பாடும் மன்றங்களாகவே செயல்படுகின்றன.
- தலித் சமூகத்தின் மீதான அடக்குமுறை தலைவிரித்தாடுகிறது. தலித் மாணவர் களையும் பிறசாதி குழந்தைகளையும் ஒன்றாக அமர வைத்து ஒற்றுமை பற்றி பேசியதற்காக ஒரு ஆசிரியை உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார். 'இந்துத்துவாவின் பரிசோதனைக் களம்' என்று அறிவிக்கப்பட்ட ஒரு மாநிலத்தில் அச்சத்தின் பிடியில் மைனாரிட்டி களும் தலித் மக்களும் வாடும் நிலையில், பார்ப்பனர்களும், பட்டேல்களும் பன்னாட்டு நிறுவனங்களுடன் சுரண்டி கொழுத்து வரும்போது வளர்ச்சிப் பாதையில் நடைபோடுகிறது என்று பேசுவது என்ன நியாயம்? கருவுற்ற தாய்மார்களின் இரத்தத்தில் இருக்க வேண்டிய சிகப்பணுக்களின் எண்ணிக்கை குஜராத் மாநிலப் பெண்களிடம் தான் மிகக் குறைவாக இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது. தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு முறையான இட ஒதுக்கீடோ, இலவசக் கல்வியோ, அங்கே இருக்கிறதா? என்ற கேள்விக்கு, இவர்களிடமிருந்து பதில் இல்லை. இதுதான் மோடி ஆட்சியின் சாதனைகளா?

**தகவல்கள்: 'பிரன்ட்லைன்' மே 20, 2011**

# ராஜபக்சேவுக்கு எதிராக போர்க்கொடி




21.4.2011 அன்று திருச்சி ஜங்சன் காதிகிராப் முன்பாக தலைமை கழகம் முடிவின்படி மாவட்டத்தில் இனப்படுகொலைக்கு துணை போன இந்திய அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமையேற்று நடத்தினார்.

கழகத் தோழர்கள் இளந்தாடி துரைராசன், புதியவன், திருவரங்கம், நகர செயலாளர் அசோக், பொன்னுச்சாமி, ஆறுமுகம், தம்பீஸ், தாமரைக்கண்ணன், இராவணன், அபிமன்னன், கேசவன், கார்த்திக், செல்வக்குமார், பழனி இளங்கோவன், பழனிவேல், பொருளாளர் மனோகரன், விஜி மற்றும் தோழமை அமைப்பைச் சார்ந்த தோழர்கள் துரைமுருகன், பிரபு, மணி (நாம் தமிழர்), கவித்துவன், முகில் இனியன் (தமிழ் தேச பொதுவுடைமை கட்சி), சீனி விடுதலையரசு, அன்பழகன், தினேஷ்குமார் (பெரியார் பாசறை), ஆதவன், அதியரசு, மலர் மன்னன் ஆகியோர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மாவட்டச் செயலாளர் கந்தவேல் குமார் நன்றி கூறினார்.

### சங்கராபுரம்



இராஜபக்சேவின் இனவெறித் தாக்குதலுக்கு துணை போன இந்திய அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 21.4.2011 வியாழன் மாலை 3 மணியளவில் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் விழுப்புரம் மாவட்டம் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு சி. சாமிதுரை தலைமை தாங்கினார். கல்லை சி. ஆசைத்தம்பி, விழுப்புரம் கணேசன், திருமால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ச. பெரியார் வெங்கட், செ. பிரபு, செ. நாவாப்பிள்ளை, வெற்றிவேல், ந. அய்யனார், கல்லை தங்க செந்தில்குமார் ஆகியோர் கண்டனவுரையாற்றினர். ச.க. இளையராசா, தலித் குமார், பெ. கோவிந்தன் உள்பட ஏராளமான தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்படும் மனுவில் இரண்டு கோடி தமிழர்களின் கையெழுத்துகளை திரட்ட உலகம் முழுவதும் கையெழுத்து இயக்கம் நடைபெற்று வருகிறது. கழகத்தின் சார்பிலும் கையெழுத்து இயக்கங்கள் நடைபெறுகின்றன. இதைத் தொடர்ந்து பொள்ளாச்சியில் நகர செயலாளர் வே. வெள்ளியங்கிரி தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டு 8.5.2011 முதல் 15.05.2011 வரை கையெழுத்துகள் திரட்ட திட்டமிடப்பட்டது. அதற்படி 8.5.2011 அன்று பொள்ளாச்சி மத்திய பேருந்து நிலையம் முன்பு கையெழுத்து இயக்கம் தொடங்கியது. முதல் நாளிலேயே 10,000 கையெழுத்துகள் திரட்டப்பட்டன.


இளைஞர்களும், பெண்களும் ஆர்வமுடன் வந்து கையெழுத்துப் போட்டுச் சென்றனர். இந்நிகழ்வில் மறுமலர்ச்சி தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட், பா.ம.க., விடுதலை சிறுத்தைகள், ஆதித் தமிழர் பேரவை, ஆதித் தமிழர் விடுதலை முன்னணி, நேதாஜி இளைஞர் பேரவை, தமிழ்நாடு கொங்கு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் கழகம், தமிழ்நாடு சலவை மற்றும் சவரத் தொழிலாளர் சங்கங்கள், 24 மனை தெலுங்கு செட்டியார் இளைஞர் சங்கம், தமிழ் இளைஞர் பொதுநல மன்றம், த.ஒ.வி.இ., தமிழ் தேசிய விடுதலை இயக்கம், விஜய் மக்கள் இயக்கம் உள்ளிட்ட அமைப்புகளின் தோழர்கள் பங்கேற்று கையெழுத்துகளை திரட்டினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 12th May 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.

புரட்சிப் பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மே 19, 2011 | புரட்சி 10 | முழக்கம் 18 | விலை: ரூ.2.50



## மக்கள் பேராதரவுடன் – தமிழகத்தில் ஆட்சி மாற்றம்

# புதிய ஆட்சியின் பரிசீலனைக்கு...

*தமிழ்நாட்டில் – மக்கள் அமைதியான ஆட்சி மாற்றத்துக்கு வழி வகுத்துள்ளனர். தமிழகத்தின் 17வது முதலமைச்சராக 34 அமைச்சர்களுடன் ஆடம்பரம் இல்லாத விழாவில் மக்கள் பேராதரவோடு செல்வி ஜெயலலிதா மூன்றாவது முறையாக பதவி ஏற்றுள்ளார். தமிழகத்தில் நிலவும் மின்வெட்டு, சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்து செயல்படவிருப்பதாக முதல்வர் கூறியுள்ளார். தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் முனைப்புக் காட்டி, செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளார். இந்த நிலையில், அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிடம் அரசியல் அரங்கில் ஆரவாரமாகப் பேசப்படாத – அதே நேரத்தில் மிக முக்கியமான கீழ்க்கண்ட பிரச்சினைகளை பெரியார் திராவிடர் கழகம் புதிய ஆட்சிக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறது.*

1. தமிழ்நாடு கிராமங்களில் இன்னும் தீண்டப்படாத மக்கள் மீதான சாதி ஒடுக்குமுறை பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நீடித்து வருகிறது. இரட்டைக் குவளை, தனிச் சுடுகாடு, செருப்பு போட்டு நடக்கும் உரிமை, முடி வெட்டிக் கொள்ளும் உரிமை, இரு சக்கர வாகனங்களில் பயணிக்கும் உரிமை, தலித் மக்களுக்கு - சாதி ஆதிக்கவாதிகளால் மறுக்கப்படுகிறது. அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற அரசுத் திட்டங்களில்கூட ‘தீண்டாமை’ பின்பற்றப்பட்டு, தனித் தனி சுடுகாடுகள் கட்டப்படுகின்றன. கடந்த ஏப்ரல் மாதம் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் கூட தமிழகத்தின் இந்த மோசமான ‘தீண்டாமை’ களை உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்துள்ளது. நடந்து முடிந்துள்ள தேர்தலில் தலித் மக்கள் தங்களின் பேராதரவை அ.இ.அ.தி.மு.க. அணி வேட்பாளர்களுக்கு வழங்கி, ஆட்சியில் அமர உதவி புரிந்துள்ள நிலையில் - புதிய ஆட்சி, இந்தத் தீண்டாமைக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்துவதில் முன்னுரிமை கொடுத்து செயல்பட்டு, இந்தியாவிலேயே தீண்டாமை ஒடுக்குமுறை முற்றிலும் ஒழிந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றிக் காட்ட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம். மனிதனுக்கு மனிதன் - இழைக்கும் இந்த அவமதிப்பும், அடக்குமுறையும் தான் தமிழகத்தின் பிரச்சினைகளிலேயே முதன்மையானது என்று நாம் கருதுகிறோம்.

2. தமிழ்நாட்டில் - செங்கல்பட்டு, பூந்தமல்லி ஆகிய பகுதிகளில் ஈழத் தமிழர்களுக்கான சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்கள் மிக மோசமாக எந்த வழக்கு விசாரணையுமின்றி பல ஆண்டுகளாக அடைக்கப்பட்டுள்ளனர். சிறைச்சாலைகளிலுள்ள உரிமைகள்கூட இந்த சிறப்பு முகாம்களில் கிடையாது. உறவினர்கள் வந்து பார்ப்பதுகூட அவ்வளவு எளிதல்ல. இந்த முகாம்களிலிருந்து தங்களை விடுவித்து, ஏற்கனவே வேறு அகதிகள் முகாம்களிலுள்ள தங்கள் உறவினர்களுடன் கலந்து வாழ அனுமதியுங்கள்; அல்லது குடும்பத்தினரையாவது தங்களுடன் சேர்ந்து வாழ அனுமதியுங்கள்; அல்லது தங்கள் மீதான வழக்குகளை விசாரணைக்கு வர ஏற்பாடு செய்யுங்கள் என்ற நியாயமான கோரிக்கைகளை இந்த சிறப்பு முகாம்களில் வதைபடும் தமிழர்கள் வலியுறுத்தி போராடி வருகிறார்கள். கடந்த முறை அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இத்தகைய சிறப்பு முகாம்கள் எண்ணிக்கை குறைந்தன. மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது, இந்த முகாம்கள் எண்ணிக்கை அதிகரித்து விடுவது வாடிக்கை. தற்போது மீண்டும் செல்வி ஜெய லலிதா முதல்வராக வந்துள்ளதால், தங்கள் அவல வாழ்க்கைக்கு, விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தமிழர்கள் காத்திருக்கிறார்கள். இந்த நியாயமான கோரிக்கையை புதிய ஆட்சி, பரிசீலிக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

3. ஈழத்தில் நடந்த இறுதிக் கட்டப் போரில் ராஜபக்சே நடத்திய போர்க் குற்றங்களுக்கு, பன்னாட்டு விசாரணை வேண்டும் என்று அய்.நா. குழுவின் பரிந்துரையை - ஆதரித்து முதல் பேட்டியிலேயே அழுத்தமாக தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியவுடன், தமிழின உணர்வாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் பூரித்துப் போய் நிற்கிறார்கள். இந்த நிலையில் இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி தமிழ் நாட்டுத் தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வெளிப் படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

4. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி வளர்ச்சியில் இந்தியாவுக்கே வழிகாட்டிய பெருமை தமிழகத்துக்கு உண்டு. அந்தத் தமிழ் நாட்டில், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தின் மாணவர்கள் இப்போது கல்விக் கட்டணக் கொள்ளையால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் பெரும் கொள்ளை வணிகமாக மாறிப் போய் நிற்கும் இந்த கல்வி வணிகத்தை கட்டுப்படுத்தி, கல்வி பெறத் துடிக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான சமூகநீதி கிடைத்திடும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது, இந்த புதிய அரசின் தலையாய கடமையாகக் கருதுகிறோம்.

5. தமிழ்நாட்டின் தொழில் - வணிக வளர்ச்சி என்பது தமிழர்களின் வளர்ச்சியோடு இணைந்து நிற்கிறது. கடந்த பல ஆண்டுகளாகவே சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வழியாக தமிழ்நாட்டுக்குள் நுழைந்த பன்னாட்டு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டு மக்களின் சிறு, குறுந்தொழில்களை முழுமையாக நசுக்கி விட்டன. தமிழ்நாடு மக்களின் நிலங்கள், சுற்றுச் சூழல்கள், வாழ்வாதார உரிமைகளைப் பறித்து - அரசின், கொழுத்த சலுகைகளைப் பெற்று பெரும் லாபம் ஈட்டும், இந்த பன்னாட்டு நிறுவனங்களின் வளர்ச்சியால் தமிழ்நாட்டின் உண்மையான ஆரோக்கியமான வளர்ச்சி பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. ஆட்சி மாறியவுடன் - இதே பன்னாட்டு நிறுவனங்கள் தொழில் முதலீடு என்ற பெயரில் மீண்டும் வலை வீசி வருவதற்கு காத்திருக்கின்றன. இதனால் தமிழ் நாட்டு மக்கள் சந்தித்து வரும் நெருக்கடிகளை, கவலையுடன் புதிய ஆட்சி பரிசீலித்து, பன்னாட்டு தொழில் நிறுவனங்களின் சுரண்டலுக்கு கடிவாளம் போட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு கடமைகள் - புதிய ஆட்சிக்கு காத்திருக்கின்றன என்றாலும் - இந்த முக்கியப் பிரச்சினைகளை பெரியார் திராவிடர் கழகம், புதிய ஆட்சியின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறது.

சாதி ஒழிப்பு - இன விடுதலை - பெண்ணுரிமை - சமூகநீதி - பகுத்தறிவு என்ற லட்சியங்களுக்காக தொடர்ந்து களப்பணியாற்றும், பெரியார் திராவிடர் கழகம், இந்தப் பிரச்சினைகளின் அடிப்படையிலேயே ஆட்சிக்கு ஆதரவையும், எதிர்ப்பையும் முன்னிறுத்தி செயல்பட்டு வருகிறது. அதே வழியில் பெரியார் திராவிடர் கழகத்தின் பணி தொடரும்!

## 5 தொகுதிகளில் காங்கிரஸ் தப்பியது எப்படி?

63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் கட்சி, 5 தொகுதிகளில் மட்டும் வெற்றிப் பெற்றுள்ளது. உண்மையில் தமிழ்நாட்டு மக்கள் காங்கிரசுக்கு தர விரும்பியது ‘பூஜ்யம்’ தான். ஆனால், இந்த 5 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றிப் பெற்றதற்குக் காரணம் பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டு கூடுதல் வாக்கு பெற்று, எதிர்ப்பு வாக்குகளைப் பிரித்தது தான்!

விளவங்கோடு தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் பெற்ற 37000 ஓட்டுகள், பட்டுக் கோட்டையில் சுயேச்சை வேட்பாளர் யோகானந்த் பெற்ற 22000 ஓட்டுகள்; குளச்சல் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் பெற்ற 35000 ஓட்டுகள், கிள்ளியூரில் பா.ஜ.க. வேட்பாளர் பெற்ற 32000 ஓட்டுகள், ஓசூரில் சுயேச்சை வேட்பாளர் சத்யா பெற்ற 24000 பெற்ற ஓட்டுகள் இந்த தொகுதிகள்தான் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு வாய்ப்பாகி விட்டன.

- வாக்காளர்களை சாதி அடிப்படையில் அணி திரட்டுவது சாதிய அரசியலே தவிர, சமூகநீதிக்கான அரசியலாகாது. அது ஜனநாயகத்துக்கும் எதிரானதாகும். சமூக நீதியை பின்னுக்குத் தள்ளிவிட்டு, சாதியினரின் எண்ணிக்கை பலமே வெற்றிகளைத் தீர்மானிக்கும். தமிழ்நாட்டில் சாதியடிப்படையில் செயல்படும் அரசியல் கட்சிகள், சாதி ஒழிப்பை நோக்கமாகக் கொண்டிராமல், சாதி வாக்குகளையே நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன. இது அக்கட்சிகளின் தலைவர்கள் வளர்ச்சிக்குத்தான் பயன்படுகிறதே தவிர, ஒட்டு மொத்த சமூகத்தின் வளர்ச்சிக்காக அல்ல. அனைத்து இந்துக்களுக்கும் தலைமை தாங்கும் உரிமைகளை எடுத்துக் கொண்ட பார்ப்பனர்கள், தங்களின் சமூக ஆதிக்கத்துக்கு இந்துக்களைப் பயன்படுத்துவதற்கும், சாதிக் கட்சித் தலைவர்கள் தங்களது தலைமைக்கும், அதிகாரத்துக்கும் சொந்த சாதி மக்களைப் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு இல்லாத நிலையில், சாதிக் கட்சிகளும் உள்ளடக்கத்தில் பார்ப்பனியமாகவே மாறிப் போய் நிற்கின்றன. இந்தத் தேர்தலில் கொங்கு நாடு முன்னேற்றக் கழகம், பாட்டாளி மக்கள் கட்சி, விடுதலை சிறுத்தைகள் கட்சி போன்ற சாதிக் கட்சிகள் போட்டியிட்ட தொகுதிகளில் மக்கள் சாதியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, பிரச்சினைகளுக்கு முன்னுரிமை தந்தே வாக்களித்துள்ளனர்.
- 124 தொகுதிகளில் போட்டியிட்ட தி.மு.க., மொத்தம் பதிவான வாக்குகளில் ஒவ்வொரு தொகுதியிலும் சராசரியாக 42.11 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. அதே நேரத்தில் 63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் பதிவான வாக்குகளில் சராசரியாக பெற்றது 35.64 சதவீதம் தான். தி.மு.க.வுக்கு வாக்களிக்க விரும்பியவர்கள்கூட காங்கிரஸ் போட்டியிட்ட தொகுதிகளில் அக்கட்சிக்கு வாக்களிக்க விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது. ஈழத் தமிழர் இனப் படுகொலைக்கு துணை நின்று தமிழின வரலாற்றில் ‘நீங்காத் துரோக’ப் பழியை சுமந்து நிற்கும் காங்கிரசை தமிழ் மக்கள் இத் தேர்தலில் ஒதுக்கித் தள்ளியுள்ளனர். 2006 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 48 தொகுதிகளில் போட்டியிட்டு, மொத்தம் பதிவான வாக்குகளில் ஒவ்வொரு தொகுதியிலும் சராசரியாக 42.15 வாக்குகள் பெற்ற காங்கிரசுக்கு, முள்ளிவாய்க்கால் துரோகத்துக்குப் பிறகு - தமிழக மக்கள் வழங்கியிருக்கும் ‘பரிசு’ இது!

# பகுத்தறிவாளர் சவால்: ஓடி ஒளிந்த சாய்பாபா

அவர் சென்னையைச் சேர்ந்த ஒரு சாய்பாபா பக்தை; இதயத்தில் மூன்று அடைப்பு ஏற்பட்ட அவருக்கு அறுவை சிகிச்சை செய்தேயாக வேண்டும் என்று மருத்துவர்கள் கூறி விட்டனர். அந்தப் பெண்ணின் கனவில் வந்த சாய் பாபா, "நீ உயிர் பிழைப்பாய்; அறுவை சிகிச்சை வேண்டாம்" என்றாராம். பக்தை அடுத்த நாள் மருத்துவர்களிடம் சென்று இதை கூறினார். மருத்துவர்களும் பக்தையை சோதித்து, 'ஆமாம் உனக்கு எந்த ஆபத்தும் இல்லை; அறுவை சிகிச்சை தேவை இல்லை' என்று கூறி விட்டார்களாம்.

இதே போல் பேராசிரியராகவும், பரத நாட்டியக் கலைஞராகவும் இருந்த ஒரு இளைஞருக்கு இடுப்புக்குக் கீழே தீராத வலி ஏற்பட்டு, என்ன நோய் என்றே கண்டறிய முடியாதபோது, பாபா தந்த விபூதியை இடுப்புக் கீழே தடவியபோது நோய் குணமடைந்து விட்டதாம்.

இப்படிப்பட்ட கதைகள் புட்டபர்த்தி சாய்பாபாவின் மகிமை பற்றி வலம் வந்தன. அத்தகைய சக்தியை தன்னிடம் வைத்திருந்த பாபாவுக்கு, ஏன், தனது நோயைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை? பல நாட்கள் மருத்துவமனையில் தங்கி, ஏன் சிகிச்சை செய்துகொண்டார்?

கையசைப்பில் விபூதி வரவழைப்பது, ஒரு தந்திரமே தவிர 'அற்புதம்' அல்ல என்று, உலகத்தின் தலைசிறந்த நாத்திகவாதியான டாக்டர் கோவூர் நிரூபித்தார். அவரது சீடரான மறைந்த பிரேமானந்தாவும், சாய்பாபா மோசடிகளை மக்களிடம் அம்பலப்படுத்தி வந்தார். புட்டபர்த்தி சாய்பாபாவுக்கு சவால் விட்ட கோவூர், நேரடியாக அவரது ஆசிரமத்திலேயே சந்திக்கச் சென்றபோது, பாபா புட்டபர்த்தியை விட்டே நகர்ந்து விட்டார். கையசைப்பில் மோதிரம் வரவழைத்த பாபா மீது, தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் வழக்கு தொடரவும் பிரேமானந்தா முயன்றார்.

பெங்களூர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக இருந்த எச். நரசிம்மையா, சீரிய பகுத்தறிவாளர்; காந்தியவாதி. அவரது தலைமையில் பாபாவின் 'அற்புத மோடிகளை' விஞ்ஞான பூர்வமாக அம்பலப்படுத்த, 1976 இல் ஒரு குழு அமைக்கப்பட்டது. சாய்பாபா, தனது அற்புதங்களை குழுவிடம் நேரில் செய்து காட்ட முடியுமா, என்று குழுவினர் சவால் விட்டனர். ஆனால் பாபா சவாலை எதிர்கொள்ள தயாராக இல்லை.

பாபாவின் நெருக்கமான சீடர்கள் பலரே - பிறகு உண்மையை உணர்ந்து, பாபாவை விமர்சிக்கத் தொடங்கியதும் நிகழ்ந்துள்ளது. கிளேன்மெலாய் என்ற அவரது முன்னாள் அமெரிக்க சீடர், 'பாபா ஒரு மாந்திரிக தலைவர்; ஆன்மீகத் தலைவர் அல்ல' என்று குற்றம் சாட்டினார். நார்வேயின் ஓஸ்லோ பல்கலைக் கழகப் பேராசிரியர் இராபர்ட் பிரிட்டி, பாபாவின் பக்தராக இருந்து, பிறகு அவர் எதிர்ப்பாளரானார். பாபா - விஞ்ஞானம் பற்றிய புரிதலோ, மதங்களின் வரலாறோ அறிந்திடாதவர் என்பதை அம்பலப்படுத்தினார். ஆஸ்திரேலிய நாட்டைச் சார்ந்தவரும், மிகச் சிறந்த அறிஞருமான பிரய்ன்ஸ்டீல் - இதேபோல் பாபா பக்தராக இருந்து பிறகு மனம் மாறியவர். பாபாவின் உண்மையான தெலுங்கு 'உபதேசங்கள்' மிக அபத்தமானவை. அதை அப்படியே ஒலி பரப்பினால் அவரது அறியாமை அம்பலமாகிவிடும் என்பதால் அந்த ஒலி நாடாக்களில் அவரைப் போலவே வேறு ஒரு பேராசிரியரால் தயாரித்த உரையை பாபாவின் குரலைப் போல் பேச வைத்து, இது தான் பாபாவின் 'உபதேசம்' என்று, பரப்பியதாக அவர் குற்றம் சாட்டினார்.

தனது அமெரிக்க சீடரான 'வால்டர் கிரவுன்' என்பவருக்கு அவரது மரணத்துக்குப் பிறகு பாபா உயிர் கொடுத்தார் என்று ஒரு பிரச்சாரம் - உலகம் முழுதும் பரப்பப்பட்டது. பிரிட்டிஷ் பத்திரிகை யாளரும், உலகம் முழுதும் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு வருபவருமான மிக் பிரவுன் - இது மோசடிப் பிரச்சாரம் என்று எதிர்த்தார். சாய்பாபா தன்னைப் பற்றிய இந்த விமர்சனங்களைப் புறக்கணித்தார்.

சாய்பாபாவின் உண்மை முகம் அம்பலமாகும் போதெல்லாம் அவரைக் காப்பாற்ற பெரிய மனிதர்களின் படை ஒன்று தயாராகவே இருந்தது. 2001 ஆம் ஆண்டு டிசம்பரில் சாய்பாபா மீது மோசமான குற்றச்சாட்டுகள் வந்தபோது, பிரதமர் வாஜ்பாய், முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் பகவதி, ரெங்கநாத் மிஸ்ராத உள்துறை அமைச்சர் சிவராஜ்பட்டீல் ஆகியோர் கூட்டாக கையெழுத்திட்டு, ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதில், "பாபா ஒரு உயர்ந்த மகான்; அவரைப் பற்றி செய்தி வெளியிடும்போது ஊடகங்கள் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும்" என்று கூறியிருந்தனர். உயர்ந்த மகானின் பெருமையைப் பரப்புவதற்கு உயர்ந்த அதிகாரத்திலுள்ள மனிதர்கள் தான் தங்களது அதிகார செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டுமா? 'ரகசிய சாமியார்கள்' என்ற ஆவணப் படத்தை லண்டன் பி.பி.சி. தொலைக்காட்சி 2004 இல் ஒளிபரப்பியது. அதில் பாபா சிறுவர்களோடு பாலுறவு கொள்ளும் பழக்கமுடையவர் என்ற உண்மையை அவரது முன்னாள் சீடர்களான அலையா ரம் (Alaya Rahm), மார்க் ரோச்சே (Mark Roche) தங்களது சொந்த அனுபவங்களைக் கொண்டு அம்பலப்படுத்தினர். இதேபோல் பாபாவுக்கு எதிராகக் கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை அம்பலப்படுத்தி, டென்மார்க் நாட்டின் வானொலி (Danamarks Radio) மற்றொரு ஆவணப்படத்தைத் தயாரித்து ஒலிபரப்பியது.

'யுனெஸ்கோ'வின் 'ஆசியாட்' நிறுவனம் (UNESCO - Aceid) புட்டபர்த்தி ஆசிரமத்துடன் இணைந்து கல்வி தொடர்பான ஆய்வு நிகழ்ச்சி ஒன்றை புட்டபர்த்தியில் நடத்த திட்டமிட்டிருந்தது. சாய்பாபாவின் 'சிறுவர்கள் பாலுறவு' தொடர்பான செய்திகள் வந்தவுடன், யுனெஸ்கோ தனது திட்டத்திலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தது.

1993 ஜூன் மாதம் புட்டபர்த்தியின் படுக்கை அறைக்குள் நுழைந்த நான்கு துப்பாக்கி ஏந்திய மர்ம மனிதர்கள், துப்பாக்கியால் சுட்டனர். சாய்பாபா உயிர் பிழைத்துக் கொண்டார். உள்ளே அவரது மெய்க் காப்பாளர்களுடன் சண்டை நடந்தது. போலீசார் துப்பாக்கியுடன் வந்த 4 பேரையும் சுட்டுக் கொன்றனர். பாபாவின் உதவியாளர்கள் இருவரும் இறந்தனர். முறையான விசாரணை நடத்தாமல் மூடி மறைத்து விட்டனர். முன்னாள் உள்துறை செயலாளர் வி.பி.பி. நாயர் காவல்துறை விசாரணையை திட்டமிட்டு மூடி மறைத்து விட்டதாக குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில் பெரியார் இயக்கம் மட்டுமே பல்லாயிரக்கணக்கான மேடைகளில் இந்த சாய்பாபா மோசடிகளை மக்களிடம் அம்பலப் படுத்தி, இந்த 'பாபா'க்களை நகைப்புக்குரிய ஏமாற்றுப் பேர்வழிகளாக மக்களிடம் அம்பலப் படுத்தி வந்தன. மறைந்த சுயமரியாதை வீரர் நாத்திகம் இராமசாமி, திராவிடர் கழகத்தில் இருந்த காலத்தில் நடத்தி வந்த தனது "நாத்திகம்" வார ஏடு வழியாக வாரம்தோறும் புட்டபர்த்தி சாய்பாபா மோசடிகளை அம்பலப் படுத்தி வந்தார்.

கடைசியாக தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் கருணாநிதி, தனது இல்லத்துக்கு புட்டபர்த்தி சாய்பாபாவை அழைத்தார். அப்போது அவரது துணைவியார், குடும்பத்தினர், சாய்பாபா காலில் விழுந்து ஆசி வாங்கினர். கையசைப்பிலேயே மோதிரம் வரவழைத்து கலைஞர் கருணாநிதி மற்றும் தயாநிதி மாறனுக்கு வழங்கினார். உடனிருந்த அமைச்சர் துரைமுருகன், தமக்கும் ஒரு மோதிரம் வரவழைத்துத் தருமாறு கேட்டபோது, சாய்பாபாவிடமோ மோதிரம் இருப்பில் இல்லை.

'மனிதர் உருவில் நடமாடும் கடவுள்' என்று புட்டபர்த்தி சாய்பாபாவுக்கு கலைஞர் கருணாநிதி புகழாரம் சூட்டினார். இந்த "அவலங்களை" மூடநம்பிக்கையாளர்களும், பார்ப்பன ஏடுகளும் தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு விட்டனர். பாபா இறந்தபோது, கலைஞர் கருணாநிதியுடன் பாபா இருந்த படத்தை தவறாமல் அனைத்து ஏடுகளும் வெளியிட்டதோடு, 'நாத்திகர்கள் நம்பிக்கையையும் பெற்றவர் பாபா' என்று புகழாரம் சூட்டி எழுதின. இந்தப் பிரச்சாரத்துக்குத்தான் கலைஞர்-புட்டபர்த்தி சாய்பாபா சந்திப்பு பயன்பட்டது.

குறிப்பு: கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுற்றுப் பயணத்தில் பாபாவின் மோசடிகளை அம்பலப் படுத்தும் 'வீடியோ' ஒளிப் பேழைகள் கிடைக்கும். தோழர்கள் அதை பெற்றுப் பரப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

## பாபாவுக்கு அரசு மரியாதை அடக்கம்: அரசியலமைப்புக்கே எதிரானது

***உ**யிரியல் துறை விஞ்ஞானியும் தேசிய பாதுகாப்பு ஆலோசனைக் குழுவின் முன்னாள் உறுப்பினருமான புஷ்பா எம். பார்கவா, 'இந்து' ஏட்டில் (மே 15) எழுதிய கட்டுரையில், புட்டபர்த்தி சாய்பாபாவுக்கு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ததை அழுத்தமாகக் கண்டித்திருக்கிறார். பணக்காரர்கள், அதிகாரம் படைத்தவர்கள், சமூகத்தில் செல்வாக்கு பெற்றிருந்தவர்களை தனது சீடர்களாக வைத்திருந்தவர் புட்டபர்த்தி சாய்பாபா. முறையற்ற வழிகளில் செல்வத்தை ஈட்டிய ஏராள மானோர், அவரது சீடர்களாக இருந்தனர். அவரது மறைவு, நாட்டுக்கு எப்படி சோகமாக இருக்க முடியும்? ஏன், அரசு மரியாதையுடன் அவரை அடக்கம் செய்ய வேண்டும்? அறிவியல் மனப் பான்மையை வளர்க்க வேண்டும் என்று இந்திய குடிமகனின் கடமையாக அரசமைப்பு சட்டம் கூறும் போது, அறிவியல் மனப்பான்மைக்கு எதிராக செயல்பட்ட ஒருவருக்கு, அரசு மரியாதை காட்டுவது அரசியலமைப்புக்கு எதிரான நடவடிக்கை அல்லவா என்று அவர்கேள்வி எழுப்பியுள்ளார். பிரதமரும் – ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் கைகோர்த்துக் கொண்டு சாய்பாபாவுக்கு மரியாதை செலுத்த வந்ததை சுட்டிக் காட்டியுள்ள பார்கவா, சாய்பாபா சாதாரணமான ஒரு 'மாஜிக்' மனிதர் தான் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானியான டாக்டர் ஒய். நாயுடம்மாவும், டாக்டர் பகவந்தமும் (இவரும் ஒரு விஞ்ஞானி – சாய்பாபா பக்தராக இருந்து பிறகு, மனம் திருந்தியவர்) புட்டபர்த்தி சாய்பாபாவை நேரில் சந்தித்தார்கள். அப்போது நாயுடம்மா, தனது இரு கரங்களையும் கூப்பி, பாபா முன் நின்று கொண்டு மிகுந்த மரியாதையுடன், தனது, இரு கரங்களிலிருந்து ஒரே ஒரு புல்லை மட்டும் வரவழைத்து தருமாறு பாபாவிடம் கேட்டார். பாபாவால் புல்லை வரவழைக்க முடிய வில்லை. தனது தெய்வீக ஆற்றலால் எந்த நோயையும் பாபா குணப்படுத்தியதும் இல்லை. இயற்கை யாகவோ அல்லது மனோதத்துவ முறையிலோ, குணமடைந்த நோய்க்கு பாபாவின் ஆற்றல் என்று பொய்யாக பரப்புரை நடத்தப்பட்டது என்றும் பார்கவா அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.*

## கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள்

*30.4.2011 சனிக்கிழமை மதியம் 2 மணிக்கு திண்டுக்கல் கருந்திணை இல்லத்தில் திண்டுக்கல், தேனி, மதுரை மாநகர், மதுரை புற நகர் ஆகிய மாவட்டங்களின் கலந்துரையாடல் கூட்டமும்,*

*1.5.2011 ஞாயிறு காலை 11 மணிக்கு தூத்துக்குடி மாவட்ட தலைவர் ஆம்ரோஸ் இல்லத்தில் தூத்துக்குடி மற்றும் நெல்லை மாவட்ட கலந்துரையாடல் கூட்டமும்*

*7.5.2011 சனிக்கிழமை காலை 11 மணிக்கு திருச்சி கார்முகில் அரங்கத்தில் திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்ட கலந்துரையாடல் கூட்டமும்*

*8.5.2011 ஞாயிறு காலை 11 மணிக்கு மயிலாடுதுறை நாடார் சங்க அரங்கத்தில் நாகை மாவட்ட கலந்துரையாடல் கூட்டமும்*

*கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையிலும், பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டினன் முன்னிலையிலும் நடைபெற்றது. மயிலாடுதுறை கலந்துரையாடல் கூட்டத்தில் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டார்.*

# இந்துப் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடித்த ம.பொ.சி.

*பெரியாரை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில தமிழ்த்தேசிய அமைப்புகள் ம.பொ.சி.என்று அறியப்பட்ட ம.பொ.சிவஞானத்தை – "தமிழ்த்தேசியத் தலைவராக" உயர்த்திப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். உண்மையில் ம.பொ.சி.யின் தமிழ்த் தேசியம், பார்ப்பனியம் சார்ந்தே நின்றதை ஆதாரங்களுடன் விளக்கி, ஏப்ரல் மாத 'சிந்தனையாளன்' இதழில் வெளிவந்த கட்டுரையை இங்கு நன்றியுடன் வெளியிடுகிறோம்.*

'சிலம்புச் செல்வர்' என்று செந்தமிழ்நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப்படும் தமிழறிஞர் ம.பொ.சிவஞானம் ஆவார். 'மயிலாப்பூர் பொன்னுசாமி சிவஞானம்' ஆகிய இவர், சுருக்கமாக ம.பொ.சி. என்றே எல்லோராலும் அறியப்பட்டார். அன்னாரின் சிலை திறப்பு விழா கடந்த 9.2.2011 அன்று சென்னை தியாகராயநகர் போக் சாலை சந்திப்பில் சிறப்பாக நடைபெற்றது. தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி ம.பொ.சி. சிலையைத் திறந்து வைத்தார். 13.2.2011 அன்று தலைமைச் செயலகத்தில் ம.பொ.சி.யின் குடும்பத்தினரை அழைத்து நிதி உதவியும் வழங்கினார்.

1906 சூன் 26 இல் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் பிறந்த ம.பொ.சி.யின் குடும்பம் கொடிய வறுமையில் சிக்கித் தவித்தது. பள்ளியில் மூன்றாம் வகுப்பை அடைந்த ம.பொ.சி. பாடப் புத்தகங்கள் வாங்கவும் காசில்லாமல் மூன்று மாதத்தோடு தன் படிப்பை முடித்துக் கொண்டார். பத்து வயது தொடங்கும் முன்பே பத்து ரூபாய் முன் பணம் கிடைக்கும் என்பதற்காகத் தன் பெற்றோரால் வேலைக்கு அனுப்பப்பட்டார்.

"*என்னுடைய வாழ்க்கையில் எனக்கு ஏற்பட்ட பெரிய விபத்து ஒன்று உண்டு என்றால், கல்வி பயில வேண்டிய பருவத்தில் பாட்டாளியாக மாறிய கொடுமையாகும்*" என்று அவரே உளம் நொந்து கூறியுள்ளார்.

கட்டடத் தொழிலில் சிற்றாள் வேலை, பீடி சுற்றும் தொழில், நெசவு வேலை எனப் பல இடங்களில் அலைந்த ம.பொ.சி., இறுதியில் அச்சுக் கோக்கும் தொழிலாளி ஆனார். அஃது அவருக்கு வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை தந்தது. அச்சுக் கூடத்தையே கல்விக் கூடமாக மாற்றிக் கொண்டு பற்பல நூல்களை அவர் ஆழமாகக் கற்றுத் தேர்ந்தார். இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தில் எல்லையற்ற ஈடுபாடு காட்டிச் சிலம்புச் செல்வராய் மிளிர்ந்தார். அவருடைய நாவன்மையும் எழுத்து வன்மையும் எல்லோர் மனங்களையும் கொள்ளைக் கொண்டது.

அவர் இந்திய தேசிய அரசியலில் காந்தியாரின் கருத்துகளால் கவரப்பட்டார். 1927 இல் முறைப்படி காங்கிரசுக் கட்சியில் உறுப்பினரானார். காங்கிரசுக் கட்சி நடத்திய பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று நாடறிந்த முன்னணித் தலைவர்களில் ஒருவரானார். பலமுறை சிறைப்பட்டார்.

**தமிழரசுக் கழகம்**

காங்கிரசுக் கட்சியில் இருந்துகொண்டே 2.11.1946 அன்று ம.பொ.சி. 'தமிழரசுக் கழகம்' என்ற பொது அரசியல் அமைப்பைத் தோற்றுவித்தார். 'சுதந்தர, சோசலிச, தன்னுரிமைத் தமிழ்க் குடியரசு' என்பதைத் தன் அமைப்பின் அரசியல் கோட்பாடாக அவர் அறிவித்தார். 'தமிழகத்தில் தமிழரசு' என்ற தலைப்பில் அவர் எழுதிய அரசியல் கட்டுரையின் சில பகுதிகள் பின்வருமாறு:

"*புதிய தமிழகத்தின் பொருளாதாரக் கொள்கை பொதுவுடைமையேயன்றித் தனிவுடைமை அன்று, இந்தப் பொதுவுடைமை இலட்சியமானது தமிழர் பண்பாட்டின்படியும், தற்கால விஞ்ஞான ரீதியாக வகுக்கப்பட்ட முறைகளின்படியும் நிறைவேற்றப்படும்.*

*மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலை வகிக்கும். மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பழக்க வழக்கங்கள் சட்டப்படி தடுக்கப்படும்...*

*மேற்சொன்ன வகையில் ஒரு புதிய தமிழகத்தைச் சிருஷ்டிக்கத் தமிழரசு ஒன்றினால் தான் முடியும். அத்தகைய அரசு வேண்டுமென்று முரசு கொட்டுவோம்!*" (தமிழ்முரசு, மே 1946)

பொதுவுடைமை இலட்சியம், தமிழர் பண்பாடு, மனிதரிடையே உயர்வு தாழ்வு கற்பிக்கும் தத்துவங்களுக்குத் தடை, மத விஷயங்களில் நடுநிலை என்றெல்லாம் ம.பொ.சி. பேசினாலும் இத்தனைக் கொள்கைகளுக்கும் எதிராக இருந்த இராச கோபாலாச்சாரியுடன்தான் அவர் அரசியல் நடத்தினார். அவரைத்தான் தன்னுடைய ஞான குருவாக ஏற்றுக் கொண்டார். தன்னைப்போல் எளிய குடும்ப நிலையும் சமூகப் பின்னணியும் கொண்ட காமராசருக்கு எதிராகவே எப்போதும் களத்தில் நின்றார்.

தமிழ்க் கலாச்சாரம், தமிழர் பண்பாடு என்று ம.பொ.சி.யால் உயர்த்திப் பிடிக்கப்பட்ட எல்லாவற்றையும் குழி தோண்டிப் புதைக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டவர் குல்லுகப் பட்டர் இராசகோபாலாச்சாரி ஆவார். தான் வாழ்ந்த ஒவ்வொரு நொடியையும் பார்ப்பனிய மேலாதிக்கத்தின் நலனுக்காயும், தமிழினத்தின் அழிப்பிற்காயும் செலவிட்ட தன்னிகரற்ற ஆரியப் பார்ப்பனர் அவர்!

அதனால்தான் தந்தை பெரியார் 'ஆச்சாரியார் தான் பிடித்த முயலுக்கு நான்கு கால் என்றால், மூன்று கால் என்று சொல்லுங்கள். அவர் வடக்கே நடக்கச் சொன்னால் நீங்கள் தெற்கே செல்லுங்கள்' என்று தமிழர்களுக்கு அறிவுறுத்தினார்.

**குலக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவு**

இராசாசியின் வஞ்சக மூளையில் வடிவெடுத்த கொடிய திட்டந்தான் 'குலக் கல்வித் திட்டம்' என்பது. 'பாதி நேரம் படிப்பு. மீதி நேரம் அப்பன் குலத் தொழில்' என்னும் பச்சையான மனுதரும நெறிக்குப் பாதைப் போட்ட ஆச்சாரியாரின் இந்தக் கொடிய கல்வித் திட்டத்தை எதிர்த்துத் தமிழ்நாடே கொந்தளித்து எழுந்தது. வஞ்சகப் பார்ப்பன ஆட்சியை ஒழிக்காமல் தமிழர்க்கு வாழ்வில்லை என்று முடிவோடு வரிப்புலியாய்ச் சீறிப் பாய்ந்தார் பெரியார்.

குலக்கல்வித் திட்டத்திற்கு எதிராக தமிழ்நாடே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தபோது, அந்தக் கல்வித் திட்டத்தை ஆதரித்து ம.பொ.சி.யின் தமிழரசுக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியது. ஆச்சாரியாரின் நிலையை அரணிட்டுக் காக்க நாடெங்கும் ஊர்வலங்கள், மாநாடுகள், பொதுக் கூட்டங்கள் நடத்த முடிவு செய்தது. தி.க., தி.மு.க. மட்டுமல்ல காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த காமராசரும் குலக் கல்வித் திட்டத்தைக் கண்டித்தார். ம.பொ.சி. அந்தக் காமராசரைக்கூட விட்டு வைக்கவில்லை.

"*புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்துப் பேசினார் காமராசர். கல்வித் திட்டம் சரியா, தவறா என்பதில் அவருக்குக் கவலையில்லை. இராசாசி ஆட்சியை வெளியேற்றித் தான் அதிகாரத்திற்கு வர அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.*" (ம.பொ.சி. 'எனது போராட்டம்'. பகுதி 2: பக்கம் 392)

ஆனாலும், அலைகடலெனத் தோன்றிய மக்களின் எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாமல் இராசாசி ஆட்சியை விட்டு ஓடினார். அவரின் கேடான குலக்கல்வித் திட்டம் சவக்குழிக்குப் போனது. தமிழகத்தில் கல்வி மறுமலர்ச்சிக்குக் கால்கோளிட்ட காமராசரின் ஆட்சி மலர்ந்தது.

**திராவிட இயக்க எதிர்ப்பு**

வருணாசிரம தருமத்தை வேரோடு கிள்ளி எறிதல், சாதி ஏற்றத் தாழ்வுகளைத் தரைமட்ட மாக்குதல், மானுட சமத்துவம் பேணுதல் உள்ளிட்ட உயரிய குறிக்கோள்களுடன் உருவானதே திராவிட இயக்கமாகும். ஆனால் 'தமிழரசுக் கழகம்' என்ற பெயரில் இயக்கங்கண்ட ம.பொ.சி. பார்ப்பனியத் திற்குப் பாலூட்டுதல், பழமைக்கும் மூட நம்பிக்கைக்கும் பட்டுக் கம்பளமும் விரித்தல், ஆரியத்திற்கு அடிமைத் தொண்டு புரிதல் போன்ற வீடண ஆழ்வார் வேலைகளை ஆரவாரத்தோடு மேற்கொண்டார்.

"*ம.பொ.சி. 1951 இல் திராவிட இயக்கப் பிரச்சாரத்தை எதிர்த்து மாநாடு நடத்தினார். 'திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு' எனும் பெயரில் 1951 மார்ச்சு முதல் 1951 நவம்பர் வரையில் மாநாடுகளை நடத்தினார். இந்த மாநாடுகள் தமிழரசுக் கழகம், காங்கிரசு பெயரால் நடத்தப்படாமல் 'திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி' சார்பாக நடத்தப்பட்டன.*

*பகுத்தறிவுவாதம், மூடநம்பிக்கைகளை ஒழித்தல், இனவுணர்ச்சி என்ற பெயரால் தமிழகம் மரபு, பண்பாடு, ஆன்மிகம் ஆகியவற்றில் இருந்து திசை தவறிச் செல்லாமல் கட்டிக் காத்தன திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள்*". (நூல் : இந்திய இலக்கியச் சிற்பிகள்; ம.பொ.சிவஞானம் – பெ.சு.மணி, பக்.14)

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளில் ஒன்றாக 'மத விஷயங்களில் அரசாங்கம் பூரண நடுநிலை வகிக்கும்' என்பது குறிப்பிடப்பட்டிருந்தாலும் ம.பொ.சி. தன் வாழ்நாள் முழுவதும் இந்துத்துவக் கருத்தியலையே பற்றி நின்றார்.

சங்ககால இலக்கிய மரபுகள், பெரும்பாலும் ஆரியக் கருத்தியல்கள் அதிகம் சாராத தனித் தன்மை கொண்டவை. எனினும் வேத மதக் கலப்பும் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்னும் வருணக் கலப்பும் தாம் தொல் தமிழ் மக்களின் இயற்கை சார்ந்த பண்பாட்டுக் கூறுகளைத் தகர்த்தன. இக் கோட்பாட்டை ம.பொ.சி. ஏற்க மறுத்தார்.

தமிழ், சைவம், வைணவம், வைதீகம், இராமாயணம், பெரிய புராணம், நாயன்மார்கள், ஆழ்வார்கள், தெய்வீகம் இறை நம்பிக்கை என்பவற்றையெல்லாம் ஒன்றாகக் கலந்து, ம.பொ.சி. மூடநம்பிக்கைகளுக்கு முட்டுக் கொடுக்கும் திருப்பணியைச் சிறப்பாகவே செய்தார்.

"*தமிழருக்கே உரிய சங்க காலத்து இலக்கிய மரபுகளும் வாழ்க்கை நெறிகளும், ஆரிய மொழியும் மரபும் தமிழில் கலந்த சமய சகாப்தத்திலே திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டனவென்பது தவறாகும்.*

*தமிழ்ப் பற்றும், தமிழினப் பற்றும் சமய சகாப்தத்திலே புறக்கணிக்கப்பட்டு மூடநம்பிக்கைகள் நிரம்பிய சமயவாதமே தமிழர் மீது ஆதிக்கம் செலுத்தியது என்பது இலக்கிய ஆய்வாளர்கள் சிலருடைய தவறான வாதம். இதுவும் தவறு.*

*இனக்கலப்பும் மதக்கலப்பும் ஏற்பட்ட சமய சகாப்தத்திலே தமிழருடைய பண்பாடு அழிந்தொழிந்துவிட்டது என்று இலக்கிய ஆய்வாளர்களிலேயும் சிலர் கருதுகின்றனர். இது முற்றிலும் தவறு.*" (மேற்படி நூல், பக்.107)

*(அதாவது தமிழ்ப் பண்பாட்டில் பார்ப்பனர் பண்பாடு ஊடுருவியதால் எந்த பாதிப்பும் இல்லை என்கிறார். - ஆர்)*

3.3.1976 இல் சென்னையில் உள்ள சங்கர மடத்தில் மறைந்த 'பெரிய பெரியவாள்' சந்திரசேகர சுவாமிகள் தலைமையில் நடைபெற்ற இந்து மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய ம.பொ.சி. தன்னை ஒரு தமிழனாக எண்ணுவதைவிட இந்துவாக எண்ணுவதில் அதிகப் பெருமிதங் கொண்டார்.

"*நான் தமிழன் என்னும் இனவுணர்வுடையவன். தமிழ்ப் பேசும் எல்லா மக்களுக்கும் இந்த உணர்வு வேண்டுமென்றும் எண்ணுபவன். ஆயினும், தமிழன் என்ற வகையிலே எனக்கு இந்த உலகிலுள்ள உறவினர்கள் சுமார் நாலரைக் கோடிப் பேர்தான்... நாம் இந்துவாக இருப்பதால் ஐம்பது கோடிக்கு மேற்பட்ட மக்களோடு உறவு கொள்ள முடிகிறது. என்னைப் பொருத்தவரையில் இந்த உறவுக்காகத் தான் நான் இந்துவாக இருக்கிறேன். இனியும் அப்படியே இருக்க விரும்புகிறேன்.*" (ம.பொ.சி. ஆன்மீகமும் அரசியலும், பக்.73)

அப்படியானால் உலகில் அதிக மக்கள் எண்ணிக்கை கொண்ட மதம் புத்த மதந்தான். ம.பொ.சி. புத்த மதத்தில் சேர்ந்திருந்தால் இன்னும் கோடிக்கணக்கான மக்களோடு உறவு கொண்டிருக்க முடியுமே! ஆனால் இந்துத்துவ மாயைக்கு ஆட்பட்டுவிட்ட ம.பொ.சி.க்கு அப்படிச் செய்ய முடியாது.

"வேதா கமங்களென்று வீண்வாத மாடுகின்றீர்
வேதா கமத்தின் விளைவறியீர் - சூதாகச்
சொன்னதலால் உண்மைவெளி தோன்ற உரைத்தலிலை
என்ன பயனோ இவை?"

என்று பார்ப்பனியத்தை நத்தி வாழ்ந்த பழமைக் குருட்டு நம்பிக்கையாளர்களைப் பார்த்து வேதனையோடு பாடினார் வடலூர் இராமலிங்க வள்ளல்.

(தொடரும்)

# ஐய்.நா. அறிக்கை: இந்தியா நிலை என்ன?




*இலங்கை போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த குழுவின் பரிந்துரை அடிப்படையில் செயல்படுமாறு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளதாக டில்லி உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி ராஜிந்தர் சச்சர் வலியுறுத்தியுள்ளார்.*

இலங்கை போரின் இறுதி நிகழ்வுகள் குறித்து ஆராய்ந்த குழுவின் அறிக்கை தொடர்பான கருத்தரங்கம் டில்லி தமிழ் மாணவர் அமைப்புகள் சார்பில், டில்லியில் நடைபெற்றது. அதில் பேசும்போது, நீதிபதி சச்சர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

நீதிபதி ராஜிந்தர் சச்சர் பேசியதாவது:

ஐ.நா. குழு இலங்கைக்கு வந்து விசாரணை நடத்த இலங்கை அரசு அனுமதி மறுப்பதன் மூலம், அது எதையோ மறைக்க முயல்கிறது.

அதே நேரத்தில், ஐ.நா. உறுப்பினர் என்ற முறையில், ஐ.நா. மன்றத்தை நிராகரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை என்பதை இலங்கை அரசுக்குப் புரிய வைக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது. ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் ஆயுத ரீதியான தலையீடுகளுக்கு அமெரிக்க நிர்ப்பந்தத்தால் இந்தியா ஆதரவு கொடுக்கும் நிலையில், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றிருப்பதாக ஐ.நா. குழு அறிக்கை கூறுவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

"இந்த விஷயத்தில் இந்தியா மென்மையாக நடந்து கொள்வதில் என்ன நியாயம் இருக்கிறது? இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதம் கொடுக்கிறது என்பதற்காகவா? அப்படியே இருந்தாலும்கூட, அதைப் பற்றி கவலைப்படும் அளவுக்கு இந்தியா பலவீனமான நாடு அல்ல. அதற்கு பலம் இருக்கிறது. இந்த பிரச்சினையில், தமிழக அரசியல் கட்சிகள், குறிப்பாக தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகள், தேர்தல் நேரத்தில் மத்திய அரசை நிர்ப்பந்திக்கத் தவறிவிட்டதாகக் கவலை தெரிவித்தார் நீதிபதி சச்சர்.

அந்தக் கருத்தரங்கில், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் மணிவண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர் டி.ராஜா, லோக்ஜன சக்தி கட்சித் தலைவர் ராம்விலாஸ் பஸ்வான், ஸ்டீபன் முகர்ஜி ஆகியோர் பங்கேற்றனர்.

## கோவை அன்னூரில் கையெழுத்து இயக்கம்



இராஜபக்சே மீது பன்னாட்டு விசாரணைக் கோரி தமிழகம் முழுவதும் கழகத் தோழர்கள் கையெழுத்து இயக்கங்களை நடத்தி வருகிறார்கள்.

## கையெழுத்து இயக்கம்: நாள் நீடிப்பு

இராஜபக்சே மீது பன்னாட்டு விசாரணைக் கோரி நடைபெறும் கையெழுத்து இயக்கங்களை இம்மாதம் 31 ஆம் தேதி வரை நடத்தலாம். எனவே தோழர்கள் கையெழுத்து இயக்கத்தை தொடர்ந்து நடத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# தகுதியிருந்தும் தற்கொலை செய்து சாகும் தலித் மாணவர்கள்

*உயர்கல்வி நிறுவனங்கள் வரை எட்டிப் பார்க்கும் தலித் மாணவர்கள் - பார்ப்பன சாதி வெறி பேராசிரியர்கள் - துன்புறுத்தலால் உளம் உடைந்து, தற்கொலை செய்யும் அவலம் தொடருகிறது.*

சண்டிகார் அரசு மருத்துவக் கல்லூரி இறுதியாண்டு மாணவர் ஜஸ்பிரீத் சிங் கல்லூரி நூலகத்தில் தற்கொலை செய்து கொண்டார். தனது ஐந்தாண்டு காலப் படிப்பில் ஒரு தேர்வில்கூடத் தோல்வியுறாதவர். சிறந்த மதிப்பெண்கள் பெற்றுத் தேறியவர். அவமதிப்பும், பழிவாங்கலும் எல்லை மீறியபோது அவர் தற்கொலை விளிம்புக்குத் தள்ளப்பட்டார். காரணம் வேறொன்றுமில்லை. அவர் ஒரு தலித்.

ஜஸ்பிரீத் சிங் சிறந்த டாக்டராக மட்டுமல்ல, சண்டிகர் மருத்துவ உயர்கல்வி ஆய்வு மையத்தில் மேற்படிப்புக்காக மருத்துவக் கல்லூரியில் நுழைந்தவர். சாதி வெறி பிடித்திருந்த சமூக மருத்துவத் துறைத் தலைவர், "நீ தாழ்த்தப்பட்டவன், இட ஒதுக்கீட்டில் இடம் பெற்றிருக்கலாம். ஆனால் டாக்டராகி நீ வெளியே போக முடியாது" என்று சபதம் போட்டார்.

மனம் உடைந்த ஜஸ்பிரீத் சிங் தற்கொலை செய்து கொண்டார். ஏழு மாதங்களுக்குப் பின் அவரது தேர்வுத் தாளை மூன்று பேராசிரியர்கள் மறு மதிப்பீடு செய்து, அவர் தேர்வு பெற்றார் என்று அறிவித்தனர். ஆனால் தான் ஒரு டாக்டராகி விட்டோம் என்ற லட்சியக் கனவு நிறைவேறுவதைக் கேட்டு மகிழ ஜஸ்பிரீத் சிங் உயிருடன் இல்லை.

அண்ணனின் அகால மரணத்தால் மனம் உடைந்த அவரது சகோதரி தானும் தற்கொலை செய்து கொண்டார். அவர் ஒரு கணினிப் பயன்பாட்டுப் பட்டப் படிப்பு மாணவி.

இத்தனையும் 2008 ஜனவரியில் 'இன்சைட் 'ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட புலனாய்வால் வெளிப்பட்டது. உயர்கல்வி தேடிச் சென்று அவமானப்பட்டு தற்கொலை செய்துகொண்ட தலித் மாணவர்கள் 4 ஆண்டுகளில் 18 பேர் எனப் பட்டியலிடுகிறது 'இன்சைட்'.

மற்றொரு தலித் மாணவரான பால் முகந்த், அகில இந்திய மருத்துவப் பல்கலைக்கழகத்தின் (AIMS) மாணவர் 2010 மார்ச்சில் தற்கொலை செய்துகொண்டார். அவர் எவ்விதக் கடிதத்தையும் விட்டுச் செல்லவில்லை. ஆனால், "தனக்கு நிகழும் இழிவுகள் குறித்து வருத்தமும், மனச் சோர்வும் கொண்டிருந்தார். தனது பெயரை மாற்றிக் கொண்டு, வேறு நாட்டுக்கு ஓடிப் போனால் தான் தனது சாதி இழிவிலிருந்து தப்ப முடியும்" என்று அவர் பலமுறை புலம்பியதாக அவரது தந்தை கூறுகிறார்.

**செய்தி: 'இந்து' நாளிதழ் - 08.05.2011**

## சென்னையில் கையெழுத்து இயக்கம்




**"புரட்சிப் பெரியார் முழக்கம்"** ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 19th May 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2042 | மே 26, 2011 | புரட்சி 10 | முழக்கம் 19 | விலை: ரூ.2.50


## முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாள்

# விண்ணைப் பிளந்த வீர வணக்க முழக்கம்



இந்திய அரசே; ராஜபக்சேயின் போர்க் குற்றங்களை அய்.நா.வில் வலியுறுத்து என்று வலியுறுத்தியும், முள்ளிவாய்க்காலில் மரணத்தைத் தழுவிய மாவீரர்களுக்கும், பொது மக்களுக்கும் வீரவணக்கம் செலுத்திடவும் எழுச்சி மிகு பொதுக் கூட்டம் மே 18 அன்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் நடைபெற்றது. பொதுக் கூட்ட மேடையில் படுகொலைக்கு உள்ளான தமிழ் மக்களுக்கும், போராளிகளுக்கும் வீரவணக்கம் செலுத்திடும் வகையில், 'தீச்சுடரை' ம.தி.மு.க. பொதுச் செயலாளர் ஏற்றி வைத்தார். வீரவணக்கம் செலுத்தும் ஒலி முழக்கங்கள், விண்ணைப் பிளந்தன. மாலை 6 மணியிலிருந்தே மக்கள் கூட்டம் நிகழ்ச்சிக்கு வரத் தொடங் கியது. சுமார் 5000 தமிழர்கள் திரண்ட அந்த மாபெரும் கூட்டம் ஈழத் தமிழர் களுக்கு ஆதரவாக பெருகிவரும் மக்கள் பேராதரவை உணர்த்துவதாக இருந்தது. தொடக்கத்தில் சமர்பா, யோகராணி குழுவினர், ஈழத் தமிழின எழுச்சி இசை நிகழ்ச்சியை வழங் கினர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நடந்த இந்த இசை நிகழ்ச்சி உணர்வாளர்களிடையே உணர்ச்சி யையும், எழுச்சியையும் ஊட்டியது.



பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கூட்டத்துக்கு தலைமை தாங்கினார். கரு. அண்ணாமலை வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர்கள் அமர்நாத், குமாரதேவன், பொதுச்செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராம கிருட்டிணன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையைத் தொடர்ந்து வைகோ நிறைவுரை யாற்றினார். அன்பு. தனசேகரன் தொகுத்து வழங்கினார்.

பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் - இந்திய அரசு இப்போது தமிழர்களுக்காக முன்மொழியும் 13-வது சட்டத் திருத்தத்தின் "உரிமைகள்" என்பவை. தமிழர்களை சட்ட ரீதியாக சிங்களர்களுக்கு அடிமைப்படுத்துவதேயாகும் என்பதை விளக்கமாக குறிப்பிட்டார். பொதுச் செயலாளர் கு. இராமகிருட்டிணன், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழர்கள் ஓரணியில் திரண்டு, வலிமையான குரலை எழுப்பும் நேரம் வந்துவிட்டது. இனியும் பிரிந்து கிடக்கக் கூடாது என்று வற்புறுத்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமது உரையில், தமிழ்நாட்டிலிருந்து ஆண்டன் பாலசிங்கம், சத்தியேந்திரா, சந்திரகாசன் ஆகியோரை இந்திய அரசு வெளியேற்றியபோது தமிழகத்தில் தோன்றிய எழுச்சிக்குப் பயந்து வெளி யேற்றும் உத்தரவை இந்தியா ரத்து செய்ததை நினைவுகூர்ந்து, அதே எழுச்சியை மீண்டும் உருவாக்க வேண்டும் என்றார். அய்.நா. மனித உரிமைக் குழுவில் இலங்கைக்கு எதிராக சுவிட்சர் லாந்து உட்பட அய்ரோப்பிய நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தைத் தோற்கடித்து இலங்கை அரசைக் காப்பாற்றி, இந்தியா தமிழர்களுக்கு இழைத்த துரோகத்தை சுட்டிக் காட்டினார். வை.கோ. தமது நிறைவுரையில், ஈழத் தமிழினப் படுகொலையை திட்டமிட்டு நடத்தியது சோனியா தான் என்று குற்றம் சாட்டினார்.

"தமிழக மீனவர்கள் இனி சுட்டுக் கொல்லப்பட மாட்டார்கள் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத் துக்கு வந்த சோனியா உறுதி தந்தார்; என்ன நடந்தது?

தங்கச்சி மடத்தைச் சேர்ந்த நான்கு மீனவ சகோதரிகள் தாலி அறுத்த சோகம் முடிந்து 16 நாள்கூட ஆகவில்லை. சோனியாவுக்கு என்ன தைரியம் வேண்டும் இப்படிச் சொல்வதற்கு? கொல்லப்பட்ட தங்கச்சிமடம் மீனவன் அந்தோணி ராஜ், கடைசியாக அவன் மனைவியிடம் விடை பெறும்போது, 'நான் உயிரோடு திரும்ப வேண்டு மானால், இன்று நடக்கும் கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஜெயிக்க வேண்டும் என்று கர்த்தரிடம் வேண்டிக்கொள்' எனச் சொல்லிவிட்டுப் போயிருக் கிறான். அந்த மீனவ சகோதரி இந்த வார்த்தைகளைச் சொன்ன போது, நான் ஆடிப்போனேன். சில பதவிகளுக்காக, முன்னாள் முதல்வர் நாடகம் ஆடினார். திட்டமிட்டே கருணாநிதிக்கு சில துண்டுகளைப் போட்டார்கள். சில மந்திரி பதவி களுக்காக தீராப் பழியை, தீராத துன்பத்தைத் தேடித் தந்து விட்டீர்கள். இதனால், அவமானப்பட்டு கூனிக் குறுகி நிற்கிறீர்கள். டெல்லி ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சூளுரைத்த கருணாநிதியின் போர்க் குரல் எங்கே? ஜனநாயகத்தை நிலைநாட்ட முழங்கிய அந்த வீரம் எங்கே? தி.மு.க.வின் அந்த உணர்ச்சி எங்கே? சில பதவிகளுக்காக, நான் - என் குடும்பம் நல்லா இருந்தாப் போதும் என்று நினைத் தீர்களே! இன்று நடப்பது என்ன?

போயஸ் கார்டனுக்கு சோனியாவின் வாழ்த்துச் செய்தி உடனே போகிறது. முதலமைச்சருக்கு, பிரதமர் வாழ்த்துச் சொல்லலாம். சோனியா எதற்கு வாழ்த்து சொல்கிறார்? காரியம் முடிந்ததும் கருணாநிதியைப் பிடித்து வெளியே தள்ளுகிறார்கள். ஜெய லலிதாவை உள்ளே இழுக்கிறார்கள்" - என்றார் வைகோ.


மாநாடு போல் பொதுக் கூட்டத் துக்கு கழகத் தோழர்கள் ஏற்பாடு செய்திருந்தனர். கழகப் பொருளாளர் கரு. அண்ணாமலை தலைமையில் கழகத் தோழர்கள் பம்பரமாக சுற்றிச் சுழன்று இந்தப் பொதுக் கூட்டத்தை சிறப்பாக நடத்தி முடித்துள்ளனர். கூட்டத்தில் துண்டேந்தியதில் மக்கள் சிறு சிறு தொகையாக வழங்கிய நன்கொடை ரூ.15 ஆயிரம்.

கூட்டத்தின் வெற்றிக்கு உழைத்த தோழர்கள்: எம்.ஜி.ஆர். நகர் பகுதி தலைவர் செ. செயசீலன், செயலாளர் மு.வெங்கடேசன், பகுதி பொருளாளர் அ.குமரேசன் மற்றும் தஞ்சை தமிழன் சி.வ. வல்லரசு, மணிமொழியன், மாசில விநாயகமூர்த்தி, வி.பொற் கோவன், ஆட்டோ சங்கர் மதிவாணன், டெய்லர் கண்ணன், டைல்ஸ் குமார், ம.மூவேந்தன், தாமரைக் கண்ணன், ம. முரளி, செ.ராசா, செயராஜ் மற்றும் தோழர்கள் தொடர்ந்து பொதுக் கூட்டம் வெற்றி பெற 15 நாட்கள் இரவு பகல் பாராமல் உழைத்தார்கள்.

தஞ்சை தமிழன் நன்றி கூறிட 10.30 மணியளவில் கூட்டம் நிறைவடைந்தது.

# அவிநாசி ஒன்றியத்தில் 5 நாள் பரப்புரைப் பயணம்

***திருப்பூர் மாவட்டம் அவிநாசி ஒன்றியத்தில் கழகத்தின் சார்பாக சாதி தீண்டாமைக்கு எதிரான கிராமப் பரப்புரை பயணம் 1.5.2011 முதல் 5.5.2011 வரை மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றது.***



முதல் நாள் 1.5.2011 ஞாயிறு மாலை 4 மணிக்கு தண்டுக்காரன்பாளையத்தில் - கனல் மதி கழகப் பாடல் பாடினார். தியாகு வரவேற்புரையாற்றினார். துரைசாமி, மாவட்டத் தலைவர் கோபி, தலைமைக் கழக பேச்சாளர் வேலுச்சாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாலை 6 மணிக்கு மங்கரசுவலையபாளையத்தில் தியாகு கழகப் பாடல்கள் பாடினார். பிரசாந்த் வரவேற்புரையாற்றினார். சிற்பிராசன் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. வேலுச்சாமி சிறப்புரையாற்றினார்.

இரவு 8 மணிக்கு பேரநாயக்கன்புதூரில் தியாகு கழகப் பாடல்களை பாடினார். சிற்பிராசன் மந்திரமா தந்திரமா நடைபெற்றது. கோபி வேலுச்சாமி, சூலூர் வீரமணி சிறப்புரையாற்றினர்.

கிராம மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்தது. ஆண்களும், பெண்களும் குழந்தைகளும் கூட்டம் கூட்டமாக கலந்து கொண்டனர். புதிய தோழர்கள் இணைந்து செயல்பட விரும்பி முகவரி அளித்தனர்.

மங்கரசுவலையபாளையத்தில் இயக்கத்தில் சேர்ந்து செயல்பட விரும்பிய புதிய தோழர்கள் அடுத்ததாக பிரச்சாரம் நடந்த இடத்தில் அவர்களாகவே துண்டறிக்கைகளை ஊருக்குள் சென்று மக்களுக்குக் கொடுத்தனர். இரவு உணவுக்கு பேரநாயக்கன்புதூரில் விஜயகுமார், முத்துச்சாமி, செந்தில், செல்வராசு ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

முதல் நாள் நிகழ்ச்சியில் திருப்பூர், அவிநாசி, சேயூர், சாவக்கட்டுப்பாளையம், சூலூர் தோழர்கள் 50-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாம் நாள் 2.5.2011 திங்கள் மாலை 6 மணிக்கு இராமியம்பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. கனல்மதி கழகப் பாடல்கள் பாடினர். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட கழகத் தலைவர் துரைசாமி, தியாகு, கோபி, வேலுச்சாமி சிறப்புரையாற்றினர். இந்த பகுதியில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர். 10-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கழகத்தில் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்தனர்.

இரவு 8 மணிக்கு சிந்தாமணிப்பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. தோழர் ரவி கழகப் பாடல்கள் பாடினர். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட தலைவர் துரைசாமி, கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினர். இந்தப் பகுதியில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாவது நாள் பயணத்தில் 30 தோழர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தோழர்களுக்கு இரவு உணவு சேயூர் கனகராஜ் இல்லத்தில் வழங்கப்பட்டது.

மூன்றாம் நாள் 3.5.2011 செவ்வாய் மாலை 6 மணிக்கு சாவக்கட்டுப்பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது.

கனல்மதி, தியாகு, கழகப் பாடல்கள் பாடினர். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி புதியவன், கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினர்.

இரவு 8 மணிக்கு போத்தம்பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. கனல்மதி கழகப் பாடல்களைப் பாடினார் சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி புதியவன், கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினர். மூன்றாம் நாள் பிரச்சாரத்தில் 30 தோழர்கள் கலந்து கொண்டனர். தோழர்கள் அனைவருக்கும் தாமரைக் குளத்தில் கழக ஆதரவாளர் சாவித்திரி இல்லத்தில் இரவு உணவு வழங்கப்பட்டது.

நான்காம் நாள் 4.5.2011 புதன் மாலை 4 மணிக்கு முறியாண்டம்பாளையத்தில் நடைபெற்றது. கனல்மதி, நாத்திகன் தீண்டாமைக்கு எதிரான பாடல்கள் பாடினர். அடுத்து சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. வெள்ளமடை நாகராசு, மாவட்ட தலைவர் துரைசாமி, ஆசிரியர் சிவகாமி சிறப்புரையாற்றினர். இந்தப் பகுதியில் ஏராளமான பெண்களும், குழந்தைகளும் பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்

மாலை 6 மணிக்கு பெரியகாட்டுப்பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. ரவி, நாத்திகன் தீண்டாமைக்கு எதிரான பாடல்கள் பாடினர். அடுத்து சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி புதியவன் சிறப்புரை யாற்றினார்.

இரவு 7 மணிக்கு அசநல்லிபாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. இப்பகுதிக்கு செல்லும்போது ஜெனரேட்டர் பழுது அடைந்துவிட்டதால் தோழர் ரவி ஒலி பெருக்கியின்றி உரத்த குரலில் பேசினார்.

இரவு 8 மணிக்கு சேயூரில் பிரச்சாரம் நடைபெற்றது. கனல்மதி, தியாகு, நாத்திகன் தீண்டாமைக்கு எதிராக பாடல்களை பாடினர். திருச்சி புதியவன், துரைசாமி, வெள்ளமடை நாகராசு, ஆசிரியர் சிவகாமி சிறப்புரையாற்றினர். ஏராளமான பொது மக்கள் பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.

பிரச்சாரத்தில் கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் கழக ஆதரவாளர்கள் பெரிய காட்டுப்பாளையம், ஆனந்தசேகர், ஆறுச்சாமி, சார்க்கு சதீஷ் இரவு உணவு வழங்கினர்.

ஐந்தாம் நாள் 5.5.2011 மாலை 6 மணிக்கு ஒச்சாம் பாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. கனல்மதி, நாத்திகன், தியாகு தீண்டாமைக்கு எதிரான பாடல்கள் பாடினர். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. ஆசிரியர் சிவகாமி, கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினர்.

இரவு 8 மணிக்கு முதலிபாளையத்தில் பிரச்சாரம் நடைபெற்றது. கனல்மதி கழகப் பாடல்கள் பாடினார். சிற்பிராசனின் மந்திரமா தந்திரமா நிகழ்ச்சி நடைபெற்றது. திருச்சி புதியவன், ஆசிரியர் சிவகாமி, கோபி வேலுச்சாமி சிறப்புரையாற்றினர். கலந்துகொண்ட தோழர்களுக்கு இரவு புலால் உணவு வழங்கப்பட்டது.

ஐந்து நாட்களும் பிரச்சாரம் நடைபெற்ற பகுதிகளில் தோழர் பிரசாத், கவியரசு, தப்பட்டை அடித்து மக்களைத் திரட்டினார். விடுதலை சிறுத்தைகள் மாவட்ட துணை செயலாளர் திருப்பூர் பவெ. செல்வராசு, 2000 துண்டறிக்கையும், திருப்பூர் அகிலன் 2000 துண்டறிக்கையும் அச்சடித்து கொடுத்தனர்.

ஐந்து நாளும் கலந்து கொண்ட தோழர்கள்: திருப்பூர் முகில்ராசு, அகிலன், மணிகண்டன், சான்பூகன், வெள்காடு மணி, முத்து, அவிநாசி சோமசுந்தரம், கல்யாணசுந்தரம், கிளாகுளம், செந்தில், ஆனந்து, முருகேசன், சத்தி சுதாகர்.

நான்கு, மூன்று, இரண்டு நாள் என்று கலந்து கொண்ட தோழர்கள்: இராவணன், பெருந்துறை அர்ஜுன், துரை, சூலூர், வீரமணி, பன்னீர்செல்வம், குமரவேல், சுபாஷ் திவாகர், பல்லடம் விஜயன், திருப்பூர் நீதிராசன், தண்டபாணி, மூர்த்தி, பிரசாத், விஜி, சீனிவாசன், மாஸ்கோ நகர் விஜி ரஞ்சித், ஆதி தமிழர் பேரவை மயில்சாமி, டிஆண்டிபாளையம் சேயூர் கனகராசு, கிளாகுளம் செல்வன், கோபால், ராசுகுட்டி, குமார், ஒட்டர்பாளையம் அய்யாவு, பட்டான், ஆறுச்சாமி ஆகிய தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர். பரப்புரை பயணம் ஒருங்கிணைத்து கிளாகுளம் செந்தில் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## சுவரெழுத்து சுப்பையாவின் புரட்சி

கேள்வி: சமீபத்தில் படித்ததில் பிடித்த புத்தகம்?

பதில்: 'சுவரெழுத்து சுப்பையா - சிந்தனைப் பொறிகள்' என்ற நூலைப் படிக்கப் படிக்க பிரமிப்பு. பத்திரிகைகளிலோ ஊடகங்களிலோ ஈ.வெ.ரா. பெரியாருக்கு ஆதரவு இல்லாத காலகட்டத்தில், சுவர்களில் எழுதி எழுதியே பெரியாரின் கொள்கைகளைப் பரப்பியவர் இந்த சுப்பையா தான். மக்கள் காசு கொடுக்காமல் பெரியாரின் புரட்சி வரிகளைப் படிக்கச் செய்தவர். ஆரம்பக் கல்விகூட முழுமையாக கற்காதவர் இந்த சுவரெழுத்துப் புரட்சியாளர். அவரது கையெழுத்திலேயே நூல் முழுதும் வந்திருப்பது படிக்க கொஞ்சம் சிரமம். தவிர்த்துப் பார்த்தால் பொக்கிஷம்தான். நன்றி அதை வெளி யிட்ட பெரியார் திராவிடர் கழகத்திற்குத்தான்.

**நன்றி : 'குமுதம்' அரசு பதில்கள், 25.5.2011**

## சுயமரியாதைச் சுடர் மொழிகள்

வானில் உயர்ந்து நிற்கும் கோபுரம்;
தமிழர் மானத்தைத் தாழ்த்திநிற்கும் விகாரம்!

பித்தன் உண்மையோடு பேசுவான்
பக்தன் பொய்மையோடு பேசுகிறான்!

பலே திருடன் ஊருக்கு ஒரு பெயர் சொல்லுவான்
படே எத்தன் இடத்திற் கொரு சாமிப் பெயர் சொல்லுகிறான்!

ஒழுக்கச் சிதைவே இழுக்குடைய இந்துமதம்!
அழுக்காற்று மடையே பாழ்பட்ட சநாதனம்!

ஒத்துவரா வேதத்தை ஓதிவரும் வேதியன்கள்
ஓயும் நாளே தமிழர்களுக்குத் திருநாள்!

சீதாபிராட்டி பத்தினிப் பாட்டி தானாம்!
இராமபிரான் தான் சந்தேகப் பிராணியாம்!

விதிவிதி என்பார் மதியில்லார்;
விதி வகுத்துக் கொள்வர் மதி வல்லார்!

**- 'சுவரெழுத்து சுப்பையா' தீட்டிய சுவரெழுத்துகள் (நூல்: சிந்தனைப் பொறிகள்)**

# பார்ப்பன ஆச்சாரியாரின் 'கைத்தடி'யே ம.பொ.சி.

*பெரியாரை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில தமிழ்த்தேசிய அமைப்புகள் ம.பொ.சி.என்று அறியப்பட்ட ம.பொ.சிவஞானத்தை – "தமிழ்த் தேசியத் தலைவராக" உயர்த்திப் பிடிக்கத் தொடங்கியுள்ளனர். உண்மையில் ம.பொ.சி.யின் தமிழ்த் தேசியம், பார்ப்பனியம் சார்ந்தே நின்றதை ஆதாரங்களுடன் விளக்கி, ஏப்ரல் மாத 'சிந்தனையாளன்' இதழில் வெளிவந்த கட்டுரையை இங்கு நன்றியுடன் வெளியிடுகிறோம். (சென்றஇதழ் தொடர்ச்சி)*

இந்தியத் துணைக் கண்டத்தில் பல்வேறு மொழி - இன மக்கள் வாழ்கிறார்கள். அவர்களின் மத நம்பிக்கையும் தனித் தனி. ஒவ்வொருவரும் அவரவர் சார்ந்த மத நம்பிக்கைகளோடு வாழ முழு உரிமையுடையோர் ஆவர். ஆனால் இங்குள்ள இந்து மத வெறியர்கள் இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே உரிய நாடு என்று ஓலமிடுகிறார்கள். இந்திய ஒருமைப்பாடு காக்கப்பட இந்து மதமும் காக்கப்பட வேண்டும் என்று உரத்தக் குரல் எழுப்புகிறார்கள். அருமைத் தலைவர் ம.பொ.சி. அத்வானியின் குரலாகப் பின்காணுமாறு முழங்குகிறார்:

*'என் இந்திய நாட்டு மதம் – இந்து மதம் அழியக் கூடாது. அழிப்பாருண்டானால், உயிர் கொடுத்தும் காக்க வேண்டும் என்ற ஆர்வம் உங்களைப் போலவே எனக்கும் உண்டு. இந்தியாவின் தேசிய ஒருமைப் பாட்டிற்கு இந்து மதம் பெருமளவுக்குப் பயன்பட்டு வந்திருக்கின்றது. ஆகவே இந்து மதம் அழியுமானால், இந்தியாவின் ஒருமைப்பாடு நலிந்து போகும் என்று நம்புபவர்களில் நான் ஒருவன்'. (இந்திய இலக்கியச் சிற்பிகள், ம.பொ.சிவஞானம் – பெ.சு.மணி. பக்.113)*

ம.பொ.சி.யின் இந்துமதப் பற்று சில நேரங்களில் தமிழைத் தாழ்த்தியும், ஆரிய மொழியான சமற்கிருதத்தை உயர்த்தியும் பேசுவதைக் காணும் போது அதிர்ச்சியாக உள்ளது.

- *"ஆலயங்களில் அருச்சனை தமிழில் நடைபெற வேண்டுமென்ற கோரிக்கை நமக்கு உடன்பாடே. ஆனால் இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இது முற்றிலும் சமயத் தொடர்புடைய பிரச்சினை. இந்தப் பிரச்சினையில் வடமொழிக் காழ்ப்புக்கு (வெறுப்புக்கு) இரையாகக் கூடாது.*
- *சமற்கிருதம் இந்துக்களின் பொது மொழியாக இருப்பதன் காரணமாக, இம் மொழியில் அருச்சனையை விரும்புவோர்க்கும் தடை சொல்லத் தேவையில்லை. இது இந்து மதத்தவரின் ஒருமைப்பாட்டுக்கும் உதவி புரியும்." (ம.பொ.சி.யின் நூல்: தமிழும் சமற்கிருதமும்)*

வழிபாட்டு மொழியாக மட்டுமல்லாமல், சமற்கிருதத்தைப் பிழையறக் கற்ற புரோகிதரைக் கொண்டு தமிழர்கள் தங்கள் வீட்டுத் திருமணங்களைப் பார்ப்பனரை வைத்தும் நடத்திக் கொள்ளலாம் என்பதுதான் ம.பொ.சி.யின் உள்ளக் கிடக்கையாகும்.

வல்லாண்மை கொண்ட மொழியாக இங்கே இந்தி திணிக்கப்பட்டபோது தமிழகமே கொதித்தெழுந்து போர்க்கோலம் பூண்டது. தம் தள்ளாத வயதிலும் தார் சட்டியைத் தூக்கிக் கொண்டு தந்தை பெரியார் இந்தி எழுத்துகளை அழித்தார். அப்படி அவர் இந்தியை அழித்துச் சென்ற இடங்களுக்கெல்லாம் ம.பொ.சி. சென்று மறுபடியும் இந்தி எழுத்துக்கள் அங்கே தோன்றச் செய்தார். (தார் மீது மண்ணெண்ணெய் ஊற்றி தாரை அழித்தார்)

இந்திக்கும், வடமொழிக்கும் ஆதரவாக ம.பொ.சி. எடுத்த நிலைப்பாடுகள் அவரின் இந்திய - இந்துத்துவ பற்றுக் காரணமாய் வெளிப்பட்டவை. என்றாலும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்கிற அரசியல் முழக்கத்தை அவர் தம் வாழ்வின் இறுதிக் காலம் வரை விடாமல் தூக்கிப் பிடித்தார். 'ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை' என்கிற அவரின் அருமையான நூலில் தாய்மொழியின் மேன்மை குறித்த மேலான கருத்துகள் மிக சிறப்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆங்கில மோகத்தால் கொண்ட அடிமைப் புத்தியில் இங்குள்ள திராவிடக் கட்சிகள் பல இந்தித் திணிப்பை முன்நிறுத்தித் தமிழ் மொழி வளர்ச்சிக்குக் கேடு செய்ததை, ம.பொ.சி. அச்சமின்றி இடித்துரைத்தார்.

- *பதினைந்தாண்டு காலக்கட்டத்திற்குள் ஆங்கிலத்தின் இடத்தை இந்தி அடையாதபடி தமிழராகிய நாம் தடை போட்டோம் என்பது உண்மைதான். ஆனால், நமது தடையையும் தகர்த்துக் கொண்டு இந்தி மொழி ஆங்கிலத்தின் இடத்தைப் பிடிப்பதிலே முன்னேறிக் கொண்டுதான் இருக்கிறது. (ஆங்கிலம் வளர்த்த மூடநம்பிக்கை, பக்.27)*
- *உண்மை என்னவென்றால், தமிழக அளவில் ஆட்சி மொழியாக - பல்கலைக்கழகங்களில் பாட மொழியாக - நீதிமன்றங்களில் நிர்வாக மொழியாக இனியும் ஆங்கிலமே நீடிக்குமானால் எதிர்காலத்தில் ஆங்கிலத்தை விரட்டி இந்தி மொழி அந்த இடங்களில் அழுத்தமாக அமர்ந்து விடுவது சாத்தியமாகும். அதற்காகவேனும் உடனடியாகத் தமிழக அளவில் அரசு அலுவலகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் தமிழை அமர்த்தியாக வேண்டும். (மேற்படி நூல், பக்.29)*
- *ஆங்கில மொழியானது உலகத்தைப் பார்க்கும் சாளரமாக இருப்பதைக்கூட நான் வரவேற்பேன். உலகம் என்பது ஒரு திசை மட்டுந்தானா? எட்டுத் திசையையும் நான் பார்க்க வேண்டுமானால் ஆங்கில மொழிச் சாளரம் ஒன்று மட்டும் போதுமா? ஒரு வீட்டுக்கு ஒரே சன்னல் இருப்பது வழக்கமில்லையே!*

இப்படியாய் மூன்றாம் வகுப்பைக்கூட மூன்று மாதம் மட்டுமே படித்த ம.பொ.சி. ஒரு மாபெரும் அறிஞராகத் தாய்மொழியின் தேவைபற்றிச் சிந்தித்திருப்பது வியப்பைத் தருகிறது. திராவிட இயக்கத் தலைவர்கள் பெரும்பாலோர் 'இந்தி எப்போதும் இல்லை; ஆங்கிலம் எப்போதும்!' என்கிற சிந்தனைக்கு ஆட்பட்டுப் போனது தமிழர்க்கு தேர்ந்த பெருங்கேடே ஆகும்.

***(ஆங்கில எதிர்ப்புப் பற்றிய கட்டுரையில் மேலே கூறப்பட்டுள்ள கருத்துகள் – கட்டுரையாளரின் கருத்துகளே. – ஆர்)***

### வடவெல்லைப் போராட்டம்

தமிழகத்தின் வடவெலலைப் பகுதியில் அமைந்த திருத்தணி உள்ளிட்ட ஊர்களைத் தமிழ்நாட்டோடு இணைத்ததில் ம.பொ.சி. ஆற்றிய பங்கு ஈடிணையற்றதாகும். தமிழறிஞர் மங்கலங்கிழாரும் விநாயகம் உள்ளிட்ட மற்றவர்களும் இப்போராட்டத்தில் ம.பொ.சி.யுடன் இணைந்து மக்கள் திரள் போராட்டங்கள் பல நடத்தி வெற்றி கண்டனர். தெலுங்கர்களின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டுத் தமிழகத்தின் தலைநகரமான சென்னை, தப்பிச் செல்லாமல் காத்ததிலும் ம.பொ.சி.யின் பங்கு மாட்சிமை மிக்கது.

தென் தமிழ்நாட்டில் கேரளத்திற்கு இரையானது போக எஞ்சியிருந்த சில பகுதிகளை மீட்டுத் தமிழ்நாட்டோடு இணைத்ததில் நேசமணி உள்ளிட்ட பெருமக்களுக்குப் பெரும் பங்கு உண்டு. இதில் ம.பொ.சி.யின் பங்கு அளவானதே!

இன்றுள்ள எல்லாக் கேடுபாடுகளுக்கும் பெருமளவில் காரணமாய் இருப்பது இந்திய தேசியம் தான். இந்தியத் தேசியம் என்பது இந்தப் பாசிச - பார்ப்பனிய பயங்கரவாதத்தின் மீது கால்கொண்டு நிற்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள தேசிய இனங்கள் யாவும் தமக்குள் முரண்பட்டு முட்டி மோதிக் கொள்வது தில்லியிலுள்ள ஓநாய்களுக்குத் தித்திப்பான செய்திதான்.

இந்தியா ஓர் ஒற்றைத் தேசமல்ல என்று ஓங்கிக் குரல் கொடுத்தவர் பெரியார். ஒடுக்குண்ட உழைப்புச் சாதி மக்களின் உரிமைகளுக்காக வாழ்நாள் முழுவதும் போராடியவர் பெரியார். மானிட இனத்தையே சாதியின் பேரால் வெட்டிக் கூறுபோட்ட மாபெரும் கொடுமையை எதிர்த்துச் சமரசமின்றி போர்த் தொடுத்த தன்மான வேங்கையவர். வரலாறு நெடுகிலும் பார்ப்பன பயங்கரவாதம் நிகழ்த்திய படுகொலைகள் எண்ணற்றவை. சூத்திரச் சாதி மக்களின் (சூத்திரச் சாதி என்பது தாழ்த்தப்பட்டோரையும் உள்ளடக்கியதே) துயர்நீக்கிப் பாடுபடுவதையே தன் இறுதி இலக்காகக் கொண்டு பெரியார் செயல்பட்டார். இந்தப் பணியில் ஆரியக் கொடும் பார்ப்பனர்களில் அளவிறந்த கொடுமைகளை அவர் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெரியாரின் 'தமிழ்நாட்டு விடுதலை' என்பதைப் பார்ப்பனியம் ஒழித்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்றே கொள்ளலாம்.

அரசியல் களத்தில் பெரியாரின் பார்ப்பன - பனியா ஒழிப்புச் செயற்பாடுகளுக்கு இராசாசி மிகப் பெரும் அறைகூவலாய் நின்றார். தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு என்று பேசிய ம.பொ.சி. காலமெல்லாம் இராசாசியின் மெய் காவலர் போல் பின்தொடர்ந்தார். பெரியாரின் ஆரியப் பார்ப்பன இந்துத்துவா எதிர்ப்புப் போராட்டங்களுக்கு மறுப்புக் குரல் எழுப்ப மனுவின் மைந்தர்கள் ம.பொ.சி.யைக் கறிவேப்பிலைக் கொத்தைப் போல் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ம.பொ.சி. தனது வாழ்க்கை வரலாற்று நூலில் இராசாசியின் அடியாளாக இருந்ததைப் பற்றிப் பெருமையோடு பின்வருமாறு எழுதுகிறார்.

*"என் தலைமையை எதிர்ப்பவர்கள் என்னைவிட அதிகமாகக் கிராமணியாரையே தாக்குகிறார்கள். அதற்குக் காரணமுண்டு. கிராமணியார் வீர அபிமன்யு போன்றவர். என்னால் உடைக்க முடியாத எதிரிகளின் வியூகத்தை உடைத்து அவர் என்னை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதனால் என்னை எதிர்ப்பவர்கள் அவர் மீது அதிகம் ஆத்திரப்படுகிறார்கள்". (ம.பொ.சி. எனது போராட்டம், பகுதி 1, பக்கம் 382)*

திராவிடக் கட்சிகளை எதிர்த்து அரசியல் நடத்திய ம.பொ.சி. திராவிடக் கட்சிகள் ஆண்ட போதுதான் பதவிகள் பெற்றார். அண்ணா காலத்தில் 'உதயசூரியன்' சின்னத்திலேயே வெற்றிப் பெற்று சட்டமன்ற உறுப்பினர் ஆனார். 'சென்னை மாநிலம்' 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் பெற்ற விழா நாளில், அந்த விழாவிற்குத் தலைமை தாங்கும் தகுதியையும் பெருமையையும் அண்ணா ம.பொ.சி.க்கு வழங்கினார். கலைஞர் காலத்தில் மேலவைத் துணைத் தலைவராயும் எம்.ஜி.ஆர். காலத்தில் அதன் தலைவராயும் ம.பொ.சி. விளங்கினார்.

ஈழ மக்களின் துயர்களைப் பற்றி தனியே நூல் எழுதிய ம.பொ.சி. இராசிவ் காந்தி அனுப்பி வைத்த அமைதிப் படையின் செயல்களை ஆதரித்துக் கூட்டங்களில் பேசினார். இறுதியில் தன் அரசியல் வாழ்வை மீண்டும் காங்கிரசில் சேர்ந்து கரைத்துக் கொண்டார்.

*"தமிழரசுக் கழகம் எந்தெந்தக் கொள்கைகளுக்காகத் தோன்றியதோ, அவை ஆட்சிக்குப் போகாமலே காங்கிரசுக் கட்சியைப் பயன்படுத்தி நிறைவேற்றி விட்டதால், காந்தியடிகள் போதனைப் படி அது தேவைப்படவில்லை. காங்கிரசோடு கலந்துவிட்டது"* என்று சொல்லித் தன் கட்சியையும் காங்கிரசில் கரைத்து விட்டார்.

ம.பொ.சி.யின் புகழுக்கு மாவிளக்கு ஏற்ற நாட்டில் சில நவீன சீடர்கள் புறப்பட்டிருக்கிறார்கள். சிலம்புச் செல்வரின் வரலாற்றுப் பங்களிப்பை யாரும் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனால் அவரின் புகழ் பாடும் அதே நேரத்தில் பெரியாரைக் குப்புறக் கவிழ்த்து முதுகில் குத்தும் வேலையையும் செய்கிறார்கள்.

1938 இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று முதன்முதலில் குரலெழுப்பியவர் தந்தை பெரியார் தான்.

சாவு தன்னை ஆரத்தழுவ வரும் இறுதிக் காலத்திலும் பெரியார் நிகழ்த்திய இறுதிப் பேருரையில் (19.12.1973) தமிழ்நாடு தனியே பிரிய வேண்டும் என்றே முழங்கினார்.

ஆனால் தமிழகத்தைச் சுதந்திர நாடாக்க வேண்டும் என்ற நோக்கோடு 1946 இல் தமிழரசுக் கழகம் கண்ட ம.பொ.சி. தன் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் மீண்டும் காங்கிரசில் போய்க் கரைந்தார். காலங்கள் மாறலாம். கடந்த கால வரலாறு கூடவா மாறிப் போகும்?

(நிறைவு)


**"புரட்சிப் பெரியார் முழக்கம்"**

**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 99416 13535

# இடையாற்று மங்கலத்தில் ஒரு நாள் பயிற்சி முகாம்



கழகத்தில் புதிதாக இணைந்துள்ள இளைஞர்களுக்கு திருச்சி மாவட்டம் இடையாற்றுமங்கலம் கிராமத்தில் சட்ட எரிப்புப் போராளி, மூத்த பெரியார் தொண்டர் முத்து செழியன் இல்லத்தில் 21.5.2011 அன்று காலை முதல் மாலை வரை ஒரு நாள் பயிற்சி முகாம் சிறப்புடன் நடைபெற்றது. 20 புதிய தோழர்கள் இதில் பங்கேற்றனர். பயிற்சி முகாமுக்கு திருச்சி மாவட்டக் கழகத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். முத்து தலைமை ஏற்றார்.

காலையில் முதல் வகுப்பாக சட்ட எரிப்புப் போராளி முத்து.செழியன், பெரியார் இயக்க வரலாறு மற்றும் போராட்டங்களை விளக்கிப் பேசினார். மதிய உணவுக்குப் பிறகு சிற்பி ராசன் - புராணங்கள், இதிகாசப் புரட்டுகள் பற்றி விளக்கிப் பேசினார்.

தொடர்ந்து கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் - சாதி தீண்டாமை ஒடுக்கு முறைகள், பார்ப்பனிய வர்ண சமூக அமைப்பினால் உழைக்கும் மக்கள் இழிமக்களாக்கப்பட்ட அவலம், இதை நிலை நிறுத்த பார்ப்பனியம் திணித்த வேதம், சாஸ்திரம், மதம் மற்றும் பண்பாட்டுத் திணிப்புகள், சாதி - தீண்டாமை ஒழிய மதம், கடவுள்களையும், எதிர்க்க வேண்டிய அவசியம், இந்து மதம், கடவுள் எதிர்ப்போடு, சாதி ஒழிப்பை முன் வைத்த பெரியாரியலின் தனித் தன்மை, உலகம் உருவானதற்கான விஞ்ஞான பூர்வமான விளக்கங்கள் மற்றும் உயிர் உருவான பரிணாம வளர்ச்சிப் பற்றி விரிவாக எளிமையாக விளக்கிப் பேசினார்.

புதிய தோழர்களுடன் கழகத் தோழர்கள் இளந்தாடி துரைராசன், ஜெகநாதன், மாவட்ட செயலாளர் குமார், திருவரங்க மாநகர செயலாளர் அசோக், குணா, மாவட்ட பொருளாளர் மனோகரன், இணைச் செயலாளர் புதியவன், பெண் தோழர் விஜி, தாமரைக் கண்ணன், கொடுமுடி பாண்டியன் உள்ளிட்ட தோழர்களும் பங்கேற்றனர். பயிற்சி முகாமுக்கான தங்குமிடம், உணவு உள்ளிட்ட செலவினை தோழர் முத்து.செழியன் ஏற்றுக் கொண்டார்.

இடையாற்றுமங்கலம் பெரியார் கொள்கையின் கோட்டையாகத் திகழ்ந்த கிராமம் ஆகும். பெரியார் நடத்திய சட்ட எரிப்புப் போராட்டத்தில் ஏராளமான தோழர்கள் பங்கேற்ற ஊர். இடையாற்று மங்கலம் ஊராட்சி சார்பில் பெரியார் பெயரில் நிறுவிய பூங்காவை பெரியார் அவர்களே திறந்து வைத்தார். கழகக் கோட்டையாக விளங்கிய ஒரு ஊர், மீண்டும் கழகத்தில் புதிய பாசறை வீரர்களைத் தயார் செய்து வருகிறது.

முத்து. செழியனின் ஆர்வம், துடிப்பான செயல்பாட்டுடன், இந்தப் பயிற்சி முகாம் நடந்துள்ளது.

## சின்னக் குத்தூசி முடிவெய்தினார்

கோபம், ஆத்திரம் இல்லாதவரும், எவரிடமும் இனிமையாகப் பழகுபவரும், மற்றவர்களுக்கு உதவும் மனம் படைத்தவரும், எல்லாவற்றுக்கும் மேலாக தனக்கான சொந்த நலன்களை முற்றாகப் புறக்கணித்து, பத்திரிகை யாளர்களையும், தோழர்களையுமே குடும்பமாகக் கொண்டு வாழ்ந்தவருமான தோழர் சின்னக் குத்தூசி எனும் தியாகராசன் (80) 22.5.2011 காலை முடிவெய்தினார். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக அவரது ‘குடும்பமாக’ இருந்து பாதுகாத்து வந்த ‘நக்கீரன்’ குழும அலுவலகத்தில் அவரது உடல் பொது மக்கள் மரியாதைக்கு வைக்கப்பட்டு, எந்த மூடச் சடங்குமின்றி மயிலாப்பூர் மின் இடுகாட்டில் மாலை எரியூட்டப்பட்டது. தமிழக அரசியல் வரலாறுகளை துல்லியமாக தமது நினைவுத் திரையில் பதிவு செய்து வைத்திருந்தது, அவரது தனிச் சிறப்பு. அவரது நினைவாற்றல் அபாரமானது. திராவிடர் இயக்கத்தோடு தன்னை முழுமையாக அடையாளப்படுத்திக் கொண்டவர்.

ஆனாலும், ‘ஜெயலலிதா எதிர்ப்பு - கருணாநிதி தீவிர ஆதரவு’ என்ற கட்சி அரசியல் எல்லைக்குள்ளேயே தனது ‘திராவிட’ இயக்க ஆதரவு நிலையை அவர் குறுக்கிக் கொண்டு விட்டார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் இறுதி நிகழ்வில் பங்கேற்றார்.

# எதிர்க்குரலாய் ஒலித்த ‘கானா’ நிகழ்ச்சி



மரண கானா விஜி - சாவு வீடுகளில் சென்னையில் கானா பாடல்களை பாடும் இளைஞர். அவரது இரண்டு கால்களும் செயலற்றவை. ஊன்றுகோல் உதவியுடன் நடக்கிறார். தாய் தந்தையார் என்பதே அவருக்கு தெரியாது. சென்னை கடற்கரையில் 6 மாத குழந்தையாக இருந்தபோது ‘அநாதையாக’ விட்டுச் செல்லப்பட்டவர். எனவே தனக்கு சாதி மத அடையாளம் ஏதும் இல்லை; நான் மனிதன் என்று பெருமையுடன் கூறுகிறார். மூன்று நாள் பட்டினியுடன் உணவு கிடைக்குமா என்று ஏங்கித் தவித்தபோது கடற்கரையில் சில பார்ப்பனர்கள் உணவு பொருள்களையும் பழங்களையும் வீணடித்ததை நேரில் பார்த்தார். மனிதாபிமானத்தோடு தனக்கு உண்ணத் தருவார்கள் என்று எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த அவர் உள்ளத்தில் அன்று முதல் பார்ப்பன எதிர்ப்பு ஆழமாகப் பதிந்தது. பெரியாரையும், அம்பேத்கரையும் தனது தலைவர்கள் என்று கூறும் அவர், கடவுள், மத நம்பிக்கை இல்லாத பகுத்தறிவுவாதி என்று பெருமையுடன் அடையாளப்படுத்திக் கொள்கிறார். எப்போதும் கருப்புச் சட்டையுடன் காட்சியளிக்கிறார். வீரமணியின் தலைமையில் செயல்படும் திராவிடர் கழகம் ஏற்கனவே அவருக்கு பெரியார் விருது வழங்கி சிறப்பித்துள்ளது. ஆனாலும் பெரியார் திராவிடர் கழகத்தோடு தம்மை இணைத்துக் கொள்ள விரும்பிய விஜி, நேராக மேட்டூர் சென்று கழகத தலைவர் கொளத்தூர் மணியை சந்தித்து, கழகத்துடன் இணைந்து, தமது ‘கானா’ நிகழ்ச்சியை நடத்தும் விருப்பத்தைத் தெரிவித்தார். அவ்வாறே சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

19.5.2011 அன்று சென்னை ஜெர்மன் அரங்கில் நடந்த நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி வாழ்த்துரை வழங்கினர். கழகத் தோழர்களும், தமிழின உணர்வாளர்களும் நிகழ்ச்சிக்கு குடும்பத்துடன் வந்திருந்தனர். கானா விஜி சிறிது நேரம் பாடல்கள் பாடினார். தோழர் சமர்பா - யோகராணி மற்றும் கானா பாடகர் புதூர் காளி ஆகியோர் தொடக்கத்தில் எழுச்சி இசைப் பாடல்களையும் கானா பாடலையும் பாடினர். பழம் பெரும் கானா பாடகர் புதூர் காளி நீண்டகாலமாக இத்துறையில் பரிணமித்தும், திட்டமிட்டு இருட்டடிக்கப்பட்டு வருவதை கவலையுடன் குறிப்பிட்ட ‘கானா’ விஜி, அவருக்கு ‘கானா மணி’ எனும் விருதை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழியாக வழங்க ஏற்பாடு செய்திருந்தார். பலத்த கரவொலிக் கிடையே கழகத் தலைவர் கொளத்தூர் மணி அந்த விருதை வழங்கினார். தென் சென்னை மாவட்ட கழக செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார்.

## முன்னாள் மாவட்ட தலைவர் திருச்சி செ.த. இராசேந்திரன் முடிவெய்தினார்



திருச்சி மாவட்டக் கழகத்தின் முன்னாள் தலைவர் செ.த. இராசேந்திரன் (62), கடந்த 18.5.2011 அன்று விடியற்காலை முடி வெய்தினார். அவரது இறுதி விருப்பப்படி கண்கள் திருச்சி ஜோசப் கண் மருத்துவமனைக்கும், உடல், கி.ஆ.பெ. விசுவ நாதம் அரசு மருத்துவமனைக்கும் கொடையாக அளிக்கப்பட்டது. மருத்துவமனை வளாகத்திலேயே இறுதி வணக்க நிகழ்ச்சி நடைபெற்றது. தோழமை அமைப்பினர், பத்திரிகை யாளர்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 26th May 2011

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.